1768

...ered No. M. 1590 NAVASAKTI

நவசக்தி

திங்கள் வெளியீடு

'எவ்வுயிர்க்கும் அன்பாயிரு' 'அன்றன்றே பணிசெய்து கிடப்பதே'

சிலம்பு கக 1933ஆம் ஆகஸ்டு பரல் கஉ

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
28 SEP 1943
MADRAS

	பக்கம்
முடிசூடா வீரர் ...	[illegible]
கைத்தூ சித்திரம் ...	[illegible]
திருக்கோயில் வழிபாடு ...	[illegible]
நம்பெருகும் பாதகங்கள் ...	[illegible]
கீதையின் போதனை ...	[illegible]
சாந்த சுவாமிகள் ...	[illegible]
பிறர் கலைகளை நாட்டும் விதம் ...	[illegible]
இதழ்வேறு ...	[illegible]

வருடசந்தா

உள்நாடு ரூபா 3-8-0. வெளிநாடு ரூபா 4.

சத்தியம் விளங்க வேண்டுமா?

வெள்ளம் வருதற்கு முன்பே
அணைகோலிக் கொள்வது நல்லது

உங்கள் எதிர்கால நிலையைத் தெரிந்து கொண்டால் அதற்குத் தக்கபடி வாழ்வை ஒழுங்குபடுத்திக் கொள்ளுதல் கூடும்.

திருமணப் பொருத்த நிமித்தம் சிறப்பாகத் தெரிந்து கொள்ளுங்கள். இழ்வரும் விலாசத்துக்கு எழுதுங்கள்; அல்லது நேரே வாருங்கள்.

பிறந்த வருடம் மாதம் தேதி மணி இடம் முதலியவற்றைச் சரியாகக் குறித்தனுப்புங்கள்.

ஒருபாவம் முற்றிலுஞ் சொல்ல ரூபா 10; ஒரு ஜாதகத்தின் பொதுப் பலன் கூற ரூபா 10; ஒரு ஜாதகக் குறிப்பு மட்டும் எழுத ரூபா 2; குறுதி சங்களை உரைக்க ரூபா 2.

C. J. கிருஷ்ணசாமி,
38, வயித்தியநாத முதலி தெரு, சென்னை.

162253

அரிய தமிழ் நூல்கள்

	ரூ.	அ.
கந்தபுராணச் சுருக்கம் (மூலமும் பொழிப்புரையும் விருத்தியும்)....	3	0
முருகவேள் பனுவல் திரட்டு	1	0
திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் முதல் திருமுறை (அரும் பத வுரையும் சரித்திரக் குறிப்பும்)	0	12
முருகன் திருவருட்பா	0	8
தேவி தோத்திர மஞ்சரி	0	4
குசேலோபாக்கியானம் (மூலமும் அரும்பத உரையும்)	1	4
விநாயகர் பனுவல் திரட்டு	0	6
திருப்போரூர்ச் சந்நிதிமுறைத் திரட்டும், அரும்பத உரையும்		
கிளேஸ்	0	5
ஷெ ரப்	0	3
சிவபுண்ணியத் தெளிவு	0	3
காரைக்காலம்மையார் பதிகங்கள் (திரு. வி. க.) அரும்பதக் குறிப்புரையுடன்	0	6

திரு அருட்பா - ஆ. பாலகிருஷ்ணபிள்ளை பதிப்பு.

சுவாமிகள் கையெழுத்தைக்கொண்டு பிழை களையப்பட்ட சுத்த பாடமுள்ளது.
நூதன விஷயங்களும் ஆராய்ச்சிக் குறிப்புக்களும் நிறைந்தது.

6-வது தனிப்பாசுரப் பகுதி - அட்டைகளிலே அணு 5.
(பல மத ஸ்தோத்திரங்கள் - கலியுகக் கோலம் - தடும்ப கோஷம்)

திருவாசகம் மூலமும் உரையும் விலை ரூபா 3.

முருகவேள் புத்தகசாலை,
12, கணபதிமுதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை.

DIIG
l of Lstacer

Prelim.
P.

Main Book :

Supplementary:
pages
To

Missing pages
( )

Net pages =

28	239
	242
	—
	242

Date sent for Mending:

Mended by:

Checked by:

Date of Return:

Lib.Asst/A.L

En/

Registered No. M. 1500.

நவசக்தி

'எவ்வுயிர்க்கும் அன்பாயிரு' 'என்கடன் பணிசெய்து கிடப்பதே'

சிலம்பு கரு ஸ்ரீமுகவருஷ ஆவணிமீ பரல் கo

பூகோள விலாசம்

(தொடர்ச்சி)

பெருமானைத் தென்மருதூர்ப் பெம்மானைப் பாத
தொருமானைச் சேர்க்கு முருவை—வருமானை
வத்திரனைத் தந்திதிசை வத்திரனை முன்பூற
வத்திரனை நீண்டவிண்டு வத்திரனை—பத்தசகந்ர
சேகரனை நாகலிங்க தேசிகனை மிக்ககரு
ணைகரனை முன்னி யடிபணிந்து—தேகமதில்
வெண்குட்டந் தீரவென்றும் மேற்றடிப்புத் தீரவென்றும்
கண்கெட்டேன் தீர்க்கக் கடாட்சியென்றுந்—தண்குட்டம்
அட்டோ தரங்கள் அகற்றென்றுங் குன்மவலி
கட்டோடே தீர்க்கக் கடவையென்றும்—மட்டில்லாப்
பாண்டு விடகரப்பன் பற்குத்தூக் காமாலை
நீண்ட சலக்கழிச்சல் நீரழிவு—பூண்டநெடுந்
தாகம் வறட்சி சயங்காசம் விப்புருதி
கூகை படுவன் குலையெரிவு—வேகமுடன்
வந்தபிணி யெல்லாமு[1]மாற்றிட வேணுமென்றுஞ்
சந்ததிகள் நீதந் தருளென்றுஞ்—சொந்த
மனையும்நெடு மாளிகையும் மாறுத வாழ்வும்
அனமுங் கொடுத்தருள்வை யென்றுந்—தன தாகப்
பூலோக மெல்லாம் புரக்கவரு ளாயென்றுஞ்
சாலோக சாமீப சாரூப—மேலான
வீடருளா யென்றுமிவை வேண்டிடவும் மெய்யடியார்
கூடவிளை யாடுமெங்கள் கோமானுர்—வாடுகின்ற
மன்னுயிர்கள் கேட்ட வரமளித்துத் தாபரிக்கும்
கன்னயஞ்சேர் காகேசர் நற்பதியுஞ்—சொன்னமுகில்

நூற்றெட்டுத் திருப்பதிகள்

மேனியான் தானிருக்க மிக்கபுரு டோத்தமமு
மானகர கூள மனந்தகிரி—தானேனிரும்
வேதாத்ரி விந்தாத்ரி மேக படலதலந்
தோதாத்ரி சேடாத்ரி சொன்னமத்ர—மீதான

(பிரதி)—[1]மாற்றிடுக.

சீய மயோத்தி திருவரங்கங் காஞ்சிநகர்
மாயபுரங் காஞ்சிஸ்ரீ வைகுந்தங்—கேயாச்
சதுரகிரி யிந்த்ர தலம்பிரிதி சங்க
மதுரைகிரி தீபமணி கூடம்—விதுரபுரி
சித்திர கூடந் திருநகரம் பாதாளஞ்
சத்திய லோகஞ் சதுர்த்தீப—முத்தார
பாதாளம் புல்லாணி பாற்கவட சந்தனம்புரி
மீகாம்வை குண்டகிரி வேகவதி—மாதாரும்
அத்தி கிரிகோ பததனய பூரினிய
வைத்த வகோபளம காரண்ணியஞ்—சுத்தக்
குருக்கேத்தி ரங்கும்ப கோண முதலா
யிருக்கோது மீரைம்பத் தெட்டுத்—திருப்பதியும்

ஐம்பத்தாறு தேசம்

வங்கங் கலிங்க மகதமச்ச மாருடங்
கொங்கந் தெலுங்கங் குருக்கேத்ரஞ்—சிங்களநற்
சீனம் நிடதந் திகத்தம் விராடம்கா
சீனம் விலாடமுயர் சேதிசிந்து—மானநிகழ்
சாளுவமி ராடஞ் சவுராட்ட கங்குடக
மாளவங்காந் தாரம்வங்கம் வத்தமும்—வேளைநிக
ராடவர்கள் வைகு மவந்திகொப்ப மாரியமும்
பாடலமுழங் குங்குகுதம் பஞ்சமமும்—நீடுபுக
ழொட்டியம்வி தற்பம் உயர்கோ சலமிதுலை
தொட்டியங்காம் பீரங் துளுவமுடன்—சட்டமுள்ள
கொங்கணங் கடாரங் குலிங்கங் கெவுடமுடன்
பங்களங்காம் பீலியொடு பாஞ்சால—மங்களஞ்சேர்
குச்சரமும் பப்பரமுங் கூட்பகமுங் கேகயமும்
மிச்சவளஞ் சேர்காசு மீரமுமே—மெச்சவரு
பாண்டிசே ரஞ்சோளம் பல்லவமீ மூங்கண்ட
நீண்டபுகழ்க் கொந்தளமும் நேராக—வீண்டுரைத்த
வெண்ணெழு தேசமும்பின் னேயுமதிற் சேர்ந்திருக்கும்
பண்ணை பூமி பதினெட்டு—மண்ணவரில்
வேத ரரசர் மிகும்வணிகர் சூத்திரரென்
றோதும் வருண மொருநான்கு—மீதின்றித்
தாழும் பலபலவாஞ் சாதிகளோடாண் ணூற்றாறும்
வாழுங்க்ர கத்தம்வா னப்பிரத்தம்—எழு
பிறப்பகத்துஞ் சன்னாசம் பின்பிரம சாரங்
குறப்பாமிவ் வாச்சிரமக் கூறும்—நெறிப்பாகக்
கூறும்யுகம் நான்கின் குணமே தழுமிதெல்லாம்
மாயில்குமரித்தீவில் வைகியதால்—தேறுமிந்தப்

நல்வினை தீவினை நுகர்ச்சி

பூமியொன்று மேதரும பூமியுமி தாகையினல்
கேடமட னல்வினைக்க ணின்றிடுவோர்—தாமுமெலா
மெண்பத் தொருகோடி யென்னுங் துறக்கமதிற்
பண்புற்ற போகம் பருகிடுவர்—கண்பற்றத்

தீவினைக்க ணின்றிடுவோர் செங்கோற் கடவுள்நகர்
மேவியம தெண்டிணையி னல்மெலிந்து—சாவிலாப்
பாதாளத் துள்ளிருக்கும் பாழிருபத் தெண்கோடி
மீதாம் நிரையமதில் வீழ்ந்துழல்வர்—கோதாய்கேள்
சித்தாந்தந் தேர்ந்து திருவருளைப் பெற்றவர்கள்
சுத்தானு பூதியினிற் றேய்ந்திடுவர்—வித்தாக
மூன்றினுக்கும் யோக்யமென முன்னூல் மொழிந்திடுமா
மேன்றகும ரித்தீவு மிவ்வாறுந்—தோன்றுங்

கயிலைமலை

கயிலைமலை வைகுமிடங் கட்டுரைக்கக் கேளாய்
புயலா ரிமையப் பொருப்புக்—கயலாக
ஈசான பாகத் திருக்கும்வெள்ளி யம்பொருப்பிற்
றேசாரு மண்டபமுந் தெற்றிகளுந்—தூசாரு
மம்பொற் சிகர மழகுநெடுங் கோபுரமுஞ்
செம்பொற் றிருமதிலுஞ் சேர்ந்திலங்கு—மும்பர்களு
மாதவரு மட்ட வசுக்களுமெண் பாலகரும்
போதனொடு மாலிவர்கள் போற்றிசெய்ய—வாதனத்தி
லம்பிகையா ளோடு மருகிருப்பன் பூரணநற்
சம்புசிவ ருத்திரனார் தாமிருப்பார்—சம்புநெடுந்
தீவின் பெருமைதனைச் செப்பினே னித்தீவை
மேவி யுவர்க்கடலு மேற்சூழுந்—தேவாசன்

சிறகறுபடாதமலை பன்னிரண்டு

வெற்பின் சிறகரிந்து மேனாளிற் பன்னிரண்டு
வெற்புச் சிறகொடுமிவ் வேலையினிற்—றப்பியே
நாற்றிசையுஞ் சென்றொளித்த நற்றிசையின் றன்பெயர்கேள்
தோற்று மிடபகிரி தாம்ப்ரகிரி—சாற்றுகின்ற
துந்துமியிம் முக்குவடுஞ் சொற்கிழக்கின் றென்கடலின்
வந்தமிழ்ந்துஞ் சக்ரகிரி மைநாக—முந்துகின்ற
வாலாக மிம்மூன்றும் வாராகஞ் சோககிரி
மேலான நந்தனமு மேல்கடலின்—பாலாரு
முத்தரத்திற் சென்றொளித்த தோதிற் றுரோணகிரி
சத்தியுள்ள கங்ககிரி சந்த்ரகிரி—யித்திகிரி
மூன்றாரு மாகவிவை முந்நான்கு நற்கிரியுந்
தோன்று தமிழ்ந்திகிற்குஞ் சூழ்கடலி—லேன்ற

வடவா முகாக்கினி

வடகடலிற் கங்ககிரி மத்தியினிற் செய்ய
வடவைமுக வெவ்வழலும் வைகிக்—கடலுதக
மிஞ்சாம லேபருகி மேதினியிற் பல்லுயிரை
யஞ்சாமற் காக்குமரி [1]யாக்கினையால்—மஞ்சாரும்

பிலக்கத் தீவு

உப்புச் சமுத்திரமு மோரிலக்கம் யோசனையா
மப்பாற் பிலக்கத்தீ வாமதனை— வைப்பாக

(பிரதி—)[1]நாக்கினையால்.

மேதாதி யென்னுமொரு வேந்தனெடு நாட்புரந்து
தீதி லனந்தன் சிவன்கெமகன்—மாதாருஞ்
சாந்தடையன் நற்சிசிரன் சாற்றுஞ் சுகோதையன்பின்
சேர்ந்தருச னேழு சிறுவர்களைப்—பாந்தமுடன்
பெற்றவருக் கிந்தப் பிலக்கத்தீ வைப்பிரித்துக்
குற்றமறக் காக்கக் கொடுத்தனன்பின்—சுற்றமுட
னன்னே ரெழுவரு மாய்ப்புரந்தா ரத்தீவின்
மூன்னேரை யாரியரென் றேமொழிவர்—மன்னவரைச்
580 சொல்வார் குராரரெனத் தொல்வணிகர் தங்களையும்
பல்கால் விதிற்சியரென் றேபகர்வார்—மல்லாரும்
பின்னவரைப் [1]பவ்யரெனப் பேசுவா ருணிவர்க்குக்
கன்னலினற் சாறருந்திக் காளையராய்ப்—பொன்னெளிரும்
பங்கயத்தோன் பாதம் பணிந்திடுவா ராயுணிலை
மங்காம லையா யிரவருடந்—தங்குமிதிற்
சோமகிரி சந்த்ரகிரி துந்துமிவைப் ராசகிரி
நாம விடபகிரி நாரதமுந்—தாமும்
உவமேதமென் னுமலை யோரேழுண் டாங்கே
நவபாஞ் சகைசுகிர்தை நாடும்—பவமகற்றுஞ்
585 சந்தசை விபாவை தருக்கிருட்ணை நற்கிலமை
வந்தமிர்தை யெண்கியிடும் வைகிரிடும்—அந்தமுள்ள
இத்தீவிற் செம்பொன் னிறவிமரம் நிற்கையினு
வித்தீ விறவித்தீ யென்றுரைப்பர்—முத்தேதகே
ளித்தீவி னீள மிரண்டிலக்க யோசனையில்
வித்தாரங் கன்னலகதி மேற்சூழு—மத்தியதில்
நாப்பண் விளங்கும் நவமணியின் பாறையினிற்
பூப்பொலியு மைந்தேனும் பூங்காவுங்—காப்புடைய
நந்தா வனமும் நறுநீரின் வாவியுந்தே
னுந்துமலர்ச் செங்கழுநீ ரோடைகளு—மிந்தவனஞ்
590 சேர்ந்திருக்கு மந்தத் திருமணிநற் பாறையினிற்
பூந்தவிசின் றேவைகளும் பூவைவண்ணன்—வேந்தன்முதற்
றேவர் முனிவர் சிறந்துசரண் போற்றிநிற்க
ரவளருஞ் சோதிமணி மண்டபத்திற்—ருவுமெழில்
ணிக்கச் சிங்கா சனமதனில் மத்தியிற்பூ
சோ...ந்தின் மேல்விருத்தங் கொண்டதன்மேற்—பாணிக்கு
மட்டதன் மீதி லறுகோண மங்கதன்மேற்
றிட்டதிறி கோணத் திராசரிக்கஞ்—சட்டமுடன்
பாத மிரண்டும் பருமுதர பந்தனமுஞ்
சோதிமுந்நூல் மார்பகமுஞ் சுந்தரமுங்—கோதிலாக்
595 கைகள்பதி னென்றுங் கயமுகமும் நால்வாயுங்
கைகள்பதி னென்றிற் கலந்திருக்கு—மையதொரு
மாதுளங்க மோடுகதை வான்கரும்பு சூலமுடன்
றீதில்வளை பாசஞ் செழுங்கமலந்—தாதார்
கருங்குவளை நெல்லின் கதிரிடது கோடு
மருங்கிரண்டுஞ் சேர்ந்திருக்க மற்றுங்—கருங்கதிர்கால்

(பிரதி)—[1]பவ்யனெனப்.

செம்மணியின் நற்கலசஞ் சேர்ந்த துதிக்கைதிகழ்
மும்மதமு மோர்கோடு முக்கண் ணுங்—கொம்மைமுலை
வல்லபைப் பெண்வர்மக வானின் மகிழ்ந்திருப்ப
அல்லிலகர் கூந்த லரம்பையர்கள்—சொல்லரிய
நாட்டியங்க ளாடவிஞ்சை நாட்டியர்க ளாடவும்வின்
ஞட்டியங்க ளார்ப்பமிக நஞ்சமிழுஞ்—சூட்டரவின்
கன்னியரி ரட்டைக் கவரி பணிமாற
மின்னுதுகிற் பாவாடை வீசிகிற்கப்—பொன்னேடை
மத்தகமுஞ் சென்னியினின் மாமகுட முந்துலங்க
வித்தக விநாயகரும் வீற்றிருப்ப—ரித்தகைய

இல்வத் தீவு

கன்னல்தருஞ் சாற்றின் கடலு மிரண்டிலக்க
மின்னகடற் கப்பா லிலவத்தீ—வன்னதனை
வாசமாய்க் காக்கும் வபுட்டிமான் வெள்ளைவிடை
யீசரனை வேண்டி யிருக்குமந்நாள்—பேசரிய
வித்தியுதன் சீமூதன் மேன்மையுள்ள சுப்பிரத
னொத்த சுவேத னுலோகிதனும்—புத்தியுள்ள
மானசன்பின் னுமரிதன் மைந்த ரெழுவரையு
மீன மறப்பயந்தா னித்தீவைத்—தானவர்க்குப்
பங்குமோ ரேழாய்ப் பகிர்ந்தளித்தான் வேதியரை
[1]யங்கே கபில ரெனவறைவர்—மங்காத
வேந்த ரருளரென விண்டிடுவர் வர்த்தகரைச்
சாந்தமுள்ள பீதரெனச் சாற்றிடுவர்—சேர்ந்திருக்கும்
பின்வருஞ் சூத்திரரைப் பேசுவார் கிஷ்ணரென
வெந்நாளுந் தேற வினிதருந்தி—மன்னுன
வாய்வுக் கிறைதான் வழிபாடு செய்திடுவ
ராயுளிவர்க் கையா யிரம்பருவ—மேயுற்றில்
வாராகம் நற்குமுதம் மாமயிடங் கங்ககிரி
சோரா வுதனந் துரோணகிரி—சீராருஞ்
சொற்குமுதம் வான்கிரியுந் தோன்றுகிரி யோரேழும்
நிற்கும் விமோசனியும் நீணிவிர்த்தி—சுக்கிலையுஞ்
சந்திரநற் றேயை தருகிருஷ்ணை நீதியென
வந்தநதி யேழு மகாநதியாங்—கொந்தலருந்
தார்க்குழலா யித்தீவின் றன்னீளம் நாவிலக்கஞ்
சேர்க்கு மிலவு செனிக்கையினற்—பார்க்குளினிற்
சான்மலித்தீ வென்றுரைத்தார் சாற்றுமிந்தத் தீவதனைத்
தேன்கடலுஞ் சூழ்ந்திருக்குஞ் சேயிழையே—தேன்கடலும்
நாவிலக்கம் யோசனையி னன்னீள மிக்கடற்கப்
பாலிருக்குந் தீவும் பகரக்கேள்—சேலனைய

குசத்தீவு

கன்னுய் குசத்தீவாங் காவலனுஞ் சோதிடுமான்
நன்னேர் வணங்கநெடி நாட்புரந்து—கன்னுன

(பிரதி)—[1]அங்கை.

வேணுமா லம்போ தான்கபிரன் மெய்த்திருதி
பேணுற் புதன்சுப் பிரபாகன்—தோணுமந்த
காரகலினன் றேயேழு காதலரைப் பெற்றவர்க்குப்
பாரமிகு மத்தீவைப் பங்கேழா—யீரமுட
னீய்ந்தா னவர்க ளெழுகூறுய்த் தான்புரந்தா
ராய்ந்த திராவிடரா மந்தணர்கள்—வேந்தருமே
சுட்டுமிய ராம்வணிகர் சொல்லுஞ் சினைகர்பின்னோர்
சட்டமுள்ள மைந்தரெனத் தான்புகல்வ—ரிட்டமுடன்
நெய்யருந்தி யையா யிரம்பருவம் நீள்கமலத்
தய்யனடி போற்றி யமர்ந்துறைவர்—துய்யபுட்ப
தெந்தங் குசலந் திரிதி யுலோகிதமும்
வந்தேதமம் நாமகிரி மந்த்ரகிரி—யந்தமுள்ள
வித்துரும மென்றுரைக்கும் வெற்பேழும் வித்தியுத்தி
வைத்த பவுத்ரையொடு வைதுதை—முத்திதரும்
பாவை சமதை பகருங் [க]கிசாம்பை
தேவர்புக ழேழு திருநதியு—மேவுகுசத்
தீவுமோ ரெட்டிலக்கஞ் சேர்ந்திருக்கும் பொற்குசையத்
[1]தீவினுள தாற்குசைப்போர்த் தீவாகும்—பாவையசே
சொன்னகுசைத் தீவதனைச் சூழுமே நெய்க்கடலுந்
தன்னீள மெட்டிலக்கந் தானுறும்—பின்னதற்கு

கிரவுஞ்சத் தீவு

மீதுகிர வுஞ்சமெனு மேற்றீவா மத்தீவை
நீதியாய்க் காக்க கிருபனுமே—தீதில்
துதிமான வன்பயந்த துந்துமிநற் கண்ணன்
கதிசேர் முனிந்தந்த காரன்—மதியார்
குசலன் மனோகரன்சீர் [2]கொள்பிரபை வாமனென்
றிசையுமெழு புத்திரர்க்கித் தீவைத்—திசையோர்
அறியப் பிரித்தளித்தா ரன்னவரு மேழு
பிறிவாகக் காத்தனர்பின் பேதாய்—நெறிசேரும்
முன்னவரும் புட்கரற்கு மொய்கழற்காற் கையொளிர்வேல்
மன்னவரும் புட்காரபின் மாவணிகர்—தன்னியராஞ்
சாற்றியரா லாய்வருணத் தாருந் திசசியராங்
கூற்றுதைத்த தேவைக் குழைந்தேத்திப்—போற்றிநிதம்
ஐயா யிரப்பருவ மான்றதியைத் தானருந்தி
வைபோக மாக வதிந்திடுவார்—மெய்யான
வாமனகம் புண்டரிக மற்றுஞ் சலாதரமுஞ்
சோமகிர வுஞ்சந் துருகிரியுஞ்—சேமமதாந்
துந்துபிபி ரத்னகிரி சொல்லுமலை யேழாகுஞ்
சந்திரை மனோசெவை கார்த்திரியும்—வந்த
கவுரி குமுதபதி காண்புண்ட ரீகை
தவராடு நற்சாதி தாமெனன்—நவியமதும்
புண்யநதி யேழும் பொருந்தியிடு மத்தீவு
மெண்ணு மிலக்கமுமீ ரெட்டாகும்—பெண்ணரசே

(பிரதி) [1]தீவனுள. [2]கொள்கை பிரபை.

சொற்றகிர வுஞ்சமதைச் சூழுந் தயிர்க்கடலு
மற்றதுமீ ரெட்டிலக்க மாமகல—மற்றப்பாற்

சாகத் தீவு

640 சாகத்தீ வாமதற்குத் தார்வேந்த னவ்வியனு
மோகத்தா லீன்றெடுத்த மோதாதி—பேகத்
துருமன் சலதன் சுகுமாரன் பின்னே
தருநற் குசுமோத் தரனு—மருவளருந்
தாரார் குமான் றருநேர வீசகனென்
றோரேழு புத்திரர்க்கு மொப்புவித்தா—னோரேழு
பங்காய்ப் புரந்திருந்தார் பா[ர்]ப்பாரு மாய்வரா
மங்காத வேந்தருமே மாத்தாராங்—கொங்காரும்
மாலைப் புயவணிகர் மானசராம் பின்னவருஞ்
சீலமுள்ள மந்தகராஞ் சேயிழையே—பாலருந்தி
645 ஐயா ரிரம்பருவ மாயுளிவற் காவதனை
மெய்யான தேவனையே வேண்டிநிதி—யெய்யாமற்
சிந்தித் திருப்பனிந்தத் தீவி னுதையகிரி
சுந்தரஞ்சே ரத்தகிரி சூட்சகிரி—மந்தரம்நேர்
கேசரி நல்லம்பிகா கேயகிரி ரேவதம்பின்
பேசுஞ் சுமியகிரிப் பேரேழும்—வாசமுள்ள
வேணுகை மகாபெவினி மிக்க குமாரிபத்தி
ரேணுகையை தூயையிக்கை யென்றுபெயர்—காணும்நதி
யோரேழு தான் விளங்கு மோதுமந்தத் தீவகலம்
நோராமெண் ணான்கிலக்க நேரிழையே—சேருமிந்தப்
650 பாற்கடலுஞ் சூழ்ந்திருக்கும் பாற்கடலின் றன்னீளம்
எற்குமி யோசனையெண் ணான்கிலக்கந்—தீர்க்கமதாம்

சுவேதத் தீவு

இப்பாற் கடலினடு வெட்டிலக்கம் யோசனையி
னொப்பாய்ச் சுவேதத்தீ வொன்றுள தாம்—பொற்பாரும்
அத்தீவிற் செம்பொன் னணிநகரங் கோடியுண்டா
முத்தீவும் போற்று முனிவருஞ்—சித்தவித்தி
யாதருங் கின்னரரு மட்சருஞ் சாரணரும்
மாதருட னங்கு வசித்திடுவர்—தீதின்றி
யங்குதித்தோ ரெல்லா மறிவுடைய ராய்நேமி
சங்குகதை வில்வாள் தரித்தவராய்ச்—செங்கணெடு
655 மாலுருவ மாகி வதிந்திடுவர் பின்சிலவர்
மேலொளிரும் பூதிதிகழ் மெய்யினராய்ச்—சீலமுள்ள
கண்டிகையின் பூணினராய்க் காமமுதல் முக்குறும்பும்
விண்டகன்ற சத்த விழுமியராய்க்—கொண்ட
நரைதிரைமூப் பின்றியங்கு நண்ணிடுவ ராயுள்
பருவமொன்ப தாயிரமாம் பண்பாய்ப்—பெருவளமை
நண்ணுமந்தத் தீவில்நடு நாரா யணபுரமாம்
விண்ணுலகில் மிக்காக வேவிளங்கு—முண்ணெருங்குஞ்
சோலையெல்லாங் கற்பகமாந் தோயமெல்லாங் கங்கைநன்னீர்
சீலமுள்ள பெற்றமெல்லாந் தேனுவதா—மேலுலகிற்

660 றேவ ரரம்பையர்கள் செஞ்சிலம்பு பூசலிட
மேவிநிதஞ் சஞ்சரிக்கும் வீதிகளு—மாவளரு
மந்நகரி னுட்ப ணாரதனத் தாற் காஞ்சனத்தால்
மன்னுமயன் செய்தமைத்த மண்டபமு—முன்னதமா
மண்ட முகடளக்கு மம்பொனெடுங் கோபுரமு
மண்டலம்போ லெழுசுற்று மாமதிலுங்—கொண்ட
திருமா ளிகைசதுக்கந் தெற்றியொரு கோடி
யருளே தயமுதித்த தன்ன—விருணீக்குஞ்
சோதிப் பிரபைதரு தூய்யமணி மண்டபத்தின்
சாதிப் பணிப்பாயல் தன்மீதிற்—சீதரனும்
665 நாரா யணன்கனகம் நங்கை யடிவருடக்
கார்மேகம் போல்ஞானக் கண்வளர்வன்—சீராரும்

புட்கரத் தீவு

இக்கடலுக் கப்பா லிலக்கமுமெட் டெட்டாகும்
புக்காரகற் றீவு புறஞ்சூழு—மிக்க
சவன னெனுமரசன் றுதகிமா வீர
னிவரிரண்டு புத்திரரை யீன்று—னவர்தமக்குச்
செம்பொன் முடிபுனைந்தத் தீவதனைப் பங்கிரண்டா
யும்பர் புகழ வுவந்தளித்தா—னம்பியதை
யன்னே ரிரண்டுகண்ட மாக்கி யவர்பெயரா
லந்நாட் புரந்திருந்தா ரத்தீவை—பின்னேயத்
670 தீவில்நடுச் சக்கரம்போற் றிக்கெட்டுஞ் சூழ்ந்திருக்கும்
தூவி யெனமான சோத்ரவரை—மாவுயர
மஞ்சயுத யோசனையா மவ்வளவா மேலகலம்
வஞ்சியே பொன்னிறமாய் வைகியிடும்—விஞ்சுமதில்
முற்பாக மாவீர மென்றே மொழிந்திடுவர்
பிற்பாகந் தாதகியாய்ப் பேசிடுவ—ரிப்படியே
கண்டமிரண் டாகியமுற் கண்டமதி னலமரம்
விண்டொடவு நீண்டு விழுதுவிட்டுக்—கொண்டுநிற்கு
மம்மரத்தி னீழ லயனிருப்ப னங்குறைவோர்
வெம்மைதரு துன்ப வினையின்றி—யிம்மையினி
675 லாச்சிரம மின்றி யதிவருணம் நான்குமின்றி
வாச்ச நரைதிரையா மாசின்றிக்—காச்சுற்ற
பொன்போலும் ஞானம் பொருந்தி யுயர்நெடுமால்
தன்பாதம் போற்றுந் தகைமையராய்—பின்போலு
மேனியரா யொன்பதெனு மெய்யா யிரம்பருவம்
வானவரைப் போல வதிந்திடுவா—ரானவிந்த
மானசத்தின் கீட்டிசையில் வானவர்கோன் றன்பதியுந்
தானதற்குத் தெற்குச் சமன்பதியு—மேனிலையில்
வாரிக் கிறைபதியு மற்றும் வடதிசையிற்
சேருகின்ற சோமன் றிருப்பதியும்—நாரியரே
680 யிந்நான்கு நற்பதியி லிந்த்ரன்முதல் நால்வருமே
முன்னு யிருப்பர் முடிவரையில்—மின்னுகதிர்

(தொடரும்)

நமது சிந்தனை

[திரு. சி. சதாசிவனார்]

VII

தியானம்

ஒரு சிறிய நிலத்தை நாம் நமது முயற்சியால் பண்பு செய்து, அழகிய தோட்டமாக அமைக்கலாம். அச்சிறு தோட்டத்தினின்றும் நாம் வேண்டியவற்றைப் பெற்று, நமது வாழ்வை இனிதே நடாத்தல்கூடும். நலத்தையும், ஊதியத்தையும் அடைய விரும்பின், நாம் அத்தோட்டத்தை மிகவும் நல்ல நிலைமையில் பாதுகாத்து வரல் வேண்டுமென்று சொல்ல வேண்டுவதில்லை.

முதலில் தோட்டத்தில் ஆடு, மாடு இன்ன பிற விலங்குகள் புகுந்து பயிர் பச்சைகளைத் தின்று பாழாக்காது திண்ணிய வேலிகள் நாற்பக்கமும் அமைத்தல் வேண்டும். பயிருக்கு இறைக்கும் நீரையும் மண் சாரத்தையும் உண்டு, தோட்டமெங்கும் விரைவிற்படர்ந்து, நற்பயிர்களை வளரவிடாது பாழாக்கும் முட்செடிகளையுங் கொடிகளையும் களைதல்வேண்டும். பின்பு நிலத்தை நன்றாகக் கொத்திப் பண்படுத்தி, பாத்திகள் செப்பனிட்டு, பலன்தரும் வேண்டிய செடி கொடி வகையராக்களை இனமினமாகப்பிரித்து, அந்தம் பெறத் தகுந்த இடத்தில் ஊன்றவேண்டும். பின் நாள் தவறாது நீரிறைத்து, தாய்மார் தன்னருமைச் சிறார்களைக் காப்பதுபோல் வளர்த்து வரல்வேண்டும். ஒரு பகல் நீரிறையாவிடின் சிற்சில முளைகள் வாடிப்படுவதும் உண்டாதலால், தினந் தவறாது அத்தோட்டத்தை ஓம்பல்வேண்டும். அடிக்கடிப் பின் முளைக்கும் களைகளைக் களைதலும் அவசியமாகும்.

இவ்விதம் நாம் அத்தோட்டத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டு ஒழுகுவோமானால், சின்னாளில் நாம் பட்ட உழைப்பிற்குத் தக்க கூலி கிடைக்கலாம்.

காலஅளவில் அச்சிறுதோட்டமும் பெருகிப் பெரியதொரு காவாகவும் இடமுண்டு. அக்காவிற் கனியும் பழங்களைப் புசித்து நாம் வயிராறலாம். வெங்கோடை நாட்களில் நாம் அருமையாக வளர்த்த மாஞ்செடிகளின் தண்ணிழலிலமர்ந்து ஆதவன் கொடுமையை ஆற்றிக்கொள்ளலாம். அல்லது சிறிய கொடி இல்லமொன்று அமைத்து அதில் அமர்ந்து இன்பம்அடையலாம்.

நன் முயற்சியையும் நல்லறிவையும் பயன்படுத்தி, இயற்கையோடியைந்து, சோலையுடன் அன்புத் தொடர்பு கொண்டு, வேறு கவலையற்று, ஒழுகும் நமக்கு இயற்கை அன்னை குற்றேவல் புரிவாள். இவள்தன் கட்டிலடங்காக் கருணை வெள்ளம் நம்மாட்டுக் கரைபுரண்டு பாய்ந்து வருவதை உணர்வோம். மகார் பசியால் வாடுமே என்று கழிவிரக்கங்கொண்டு, அன்னை, இனிய கனிகளில் ஆயிரம் மாத்தலைகளிற்றூங்கித் தலைவணங்கி நாற்புறமும் நிற்பாள். பறித்து அருந்தாவிடின் மறந்து விட்டால் என் செய்வது என்று ஏங்கிக் கீழே வீழ்ந்து, கால்களில் இடறி இறைபடுவாள். நீர் வேட்கையினால் குழவிகள் வருந்துமே எனப் பால் நினைந்தூட்டுந்தாயினும் சாலப்பரிந்து, தெங்கின் இளநீராக ஊசலாடுவாள். தண்ணீரிறைத்து, உடல் வருந்தி, யாக்கையினின்றும் வியர்வை ஆறாகப் பொழியும்போது, இளந்தென் காலாக மெல்லென வீசி வெப்பந் தணித்து, நறுமணங் கமழும் அழகிய மலர்களினது பூந்தாதையள்ளிக் கம்மென எப்புறமும் பரப்பி நம் அகத்தில் இன்பமாக அரும்புவாள். அக்காலை சிறுபுள்ளினங்களையும் வண்டினங்களையும் இன்னிசை பாடி வரவிட்டு, நம்செவிகளில் பண்ணின்பமாக நின்று, நம்மைத் தன் வயமாக்குவாள். இன்னும் நடனமாதர் அரங்கமேடையில் இனிது பயிலும் களியாட்டையும் அச்சோலையின் கண்

இயற்கையன்னை ஆடி அகமகிழ்வாள்.

சேட்டிகைத் தென்கா றள்ளத் தென்மதுச்
சிதறத் தும்பி
நீட்டிசை முரலச் சாயா நின்றுபூங்
கொம்ப ராடல்
காட்டியப் புலவ ரூட்ட நகைமுகம்
வெயர்வை சிந்தப்
பாட்டிசைத் தாடா நின்ற பாவைமார்
போன்ற வன்றே!

என்ற ஒரு புலவரது கற்பனையைச் செவி மடுக்கும்போது எத்தகைய ஆனந்தம் பொங்குகின்றது!

பச்சைப்பசே லென்று எப்புறமும் இருண்டு பரந்த இலைக்கூட்டங்களின் இடையிடைப் பன்னிறத்தோடு அந்தம் பெறச்செறிந்த மலர்கள் வழங்கும் காட்சி, அதனிடையிடையுள்ள துளைகளில் சூரியனது கரங்கள் புகுந்து விளையாடும் விநோதம், பறவைகளும் அணிலாதிய சிறு பிராணிகளும் இன்கனியருந்தி இங்குமங்கும் ஓடியாடி அலையும் அற்புதம், இரவில் நீலவானத்தில் விண்மீன்கள் மரங்களினூடே எட்டி எட்டிப் பார்த்து இமைக்கும் கோலம், இன்னவை நம்மனதைக் கவர்ந்து ஐந்து புலன்கட்கும் இன்னமுதூட்டும். மனித வாழ்க்கையில் இதைவிட இன்பம் வேறுண்டோ? இவ்வளவும் யாருக்குக் கிடைக்கும்? மெய் வருந்தி யுழைத்து, சோலை வேறு நாம் வேறு எனக் கருதாது, அதனுடன் அன்பு கொண்டு வாழும் ஒருவனுக்குத்தானே இவ்வின்பம் உண்டென்று கூறலாம்.

நாம் பருமையில் இச்சோலை இன்பத்தோடு நின்றுவிடக் கூடாது. இத்திறப் புறவாழ்வானது நமக்கு இதை விடச் சாலச் சிறந்த அகவாழ்வு ஒன்று இருப்பதாக அறிவுறுத்தவேண்டும். மனமாகிய சிறந்த நிலமொன்று நம்மிடம் இருக்கின்றது. அதையும் பண்படுத்தி, அதில் வசித்து, ஒரு பயிரிட்டு அதன் கனிகளை நுகர்வதே உண்மை இன்பமளிக்கும். இதற்காகவே நாம் ஈண்டுப் பிறந்திருக்கின்றோம்.

தோட்டத்தை உழுது பயிரிட்டது போல் நாம் மனதையும் சாகுபடி செய்யவேண்டும். அதில் ஒரு வித்தையும் இட்டு, வேலி கோலிக் கண்ணேபோல் பாதுகாத்தல்வேண்டும். அவ்விதை முளைத்துச் செடியாகி மரமாகிக் காய்த்துக் கனிந்தபின், அப்பழத்தின் சுவையை மட்டும் நாம் உருசித்து விட்டால் பின் நமக்கிணையாவார் யாரும் இல்லை. பாற்சுவை கண்ட பூனையைப் போலப்பின் நாம் அச்சோலையையும் அம் மரத்தகத்தையும் விட்டகலோம் என்பது நிச்சயம்.

இதற்கும் உழவு, விதை, களை நீக்கல், நீர், காப்பு முதலிய யாவும் தேவை.

இந்நிலத்தைச் சாகுபடி செய்யத் தொடங்குமுன், நம்மிடம் விருப்பு எனும் விதை கையிலிருக்க வேண்டும். காரியம் எல்லாவற்றிற்கும் ஆதிகாரணம் அவாவே என்பது யாவரும் அறிந்ததொன்று. நாம் ஒன்றைச் செய்ய விழைவு கொண்ட பின்பே அதைச்செய்ய முற்படக் கூடும். அகத்திலெழுந்த ஆழ்ந்த அவாவின்றி நாம் ஒருகாரியஞ்செய்யப் புகின் அது சரிவரநிறை வேறுதல் கடினம். விருப்பமே எக்காரியத்திற்கும் விதையாக ஆகின்றது. இச்சையே இவ்வுலகை ஆக்கி ஆளுகின்றது என்றுங் கூறலாம். இப்பயிற்செல்லைச் செய்வதே நமது ஆயுள் வேலை என்ற விருப்பு எழுந்தால்தான் இக் காரியம் இனிது நடைபெறும்.

ஒரு நிலத்தைப் பயிரிடாது விட்டுவிட்டால் உபயோகமில்லாத புற்பூண்டுகளும், செடி கொடிகளும் அதில் முளைத்துப் பெரிய காடாகி விடுவதியற்கை. அதை உழுவதன் முன் இக்களைகளை வேரோடு பறித்து எறியவேண்டும். பின்னரே உழல் கூடும். நன்கு பண்படாத விலங்கு மனத்திலும் உபயோகமற்ற களைகள் பல உள. தப்பான ஞாபகங்களை (Error consciousness) இக்களைகள் ஆகும். இவ்வகை இன்பே முடிவென்றும், ஈண்டு, கட்டுடை மனத்தால்

புலன்வழி நுகரும் இன்ப துன்பமே உண்மை என்றும்—இவை கணத்தில் அழிந்து படுவதைக் கண்டும்—நம்பி அவைகளையே பின்பற்றி ஓடி உழன்று கொண்டிருக்கின்றோம். இன்னும் பிணி, வறுமை, துன்பம் முதலியனவே உலகில் உள்பொருள் என்ற இன்மை எண்ணங் (Negative thoughts)களையே-கேடு தரும் (destructive) எண்ணங்களையே பெரிதுங் கொள்கின்றோம். இத்தவறுகளை-மயக்கத்தை-பொய்களை மனதினின்றும் அகற்றுதல் நமது முதற் கடனாகும்.

களைகளைப் பிடுங்கி எறிந்தபின் அவ்விடத்தில் வதிந்த பாம்பு ஆதிய விஷப் பிராணிகள் உறைவிடம் அற்றதால் தாமே அகன்றுவிடும். பொய்யை மெய்யென நம்பி மோசம் போகும் மனதினின்றும் பொய்யாயின வெல்லாம் போயகன்றபின், அந்நீர்மேற் குமிழியைத் தேடித் திரியத் தோன்றும் விருப்பு, அது கிட்டாவிடில் முளைக்கும் கடுப்பு, இன்ன எரி எழுச்சிகள் இல்லா தொழியும்.

களைகளைந்த நிலம் வெற்றுத் திடலாயிருக்கும். அப்படியே அதை விட்டு விட்டால் மறுபடியும் பூண்டுகள் முளைத்துக் கிளைத்து அது கெட்டுப்போகலாம். உடனே உழுது, விதையிட்டு, நீருற்றல்வேண்டும். மனமாகிய நிலத்தினின்றும் பொய்யகன்றபின் அதை வாளா விட்டுவிட்டால் மறுபடியும் அது பழைய நிலைக்கே வந்துவிடும். ஆதலால் பொய்க்களைகளை வாங்கும் போதே உண்மை விதையை அங்கு ஊன்றல்வேண்டும். கடவுளே உண்மை, சத் (God is truth) எனும் எண்ணத்தை மனதில் பதித்து, அதையே அகத்தில் உழற்றிக் கொண்டிருப்பதே இங்கு உழவு ஆகும். இவ்வுழவை எவ்வளவு கடுமையாகச் செய்கின்றோமோ அவ்வளவு கடிதில் பயனடையலாம். இவ்வுண்மைப் பயிர் நன்கு மன நிலத்திற் பதிந்து வேரூன்றி, பிடுங்கி எறிய முடியாத (மறவாத) நிலைக்கு வரும் காலம் வரை, கண்ணுங் கருத்துமாக இவ்வுழவைச் செய்து கொண்டிருத்தல் வேண்டும்.

மரஞ் செடிகளை வளர்க்கும் நீர் போல இப்பயிரைப் பொறுமை எனும் ஒன்று வளர்க்கும். பருமைச் சோலையை ஆக்குபவனுக்கே பொறுமை அதிகம் வேண்டும். "எவ்வளவு தினங்கள் காத்திருப்பது, இன்னும் பலன் காணவில்லையே" என்று பொறையிழந்து இரண்டு தினங்கள் நீர் இறையாது விட்டால் செடி கொடிகள் வாடிப் போகலாம். நுண்மையிற் செயும் இதற்குக் கேட்கவும் வேண்டுமோ? தளையுடைய மனம் கட்டற்று விரிந்து பேறிவாகி இறையுண்மையை முன்னினைத்த படி பிணியாதிய தீமை இல்பொருள் என்றும், ஆண்டவன் இயல்பு எங்கும் நீக்கமற நிறைந்து நிற்குங்கோதிலா வமுதமென்றும், சுகவாரியென்றும், குறைவிலா நிறை வென்றும், இந்நிறைவில் வதியும் அவன் மக்களாகிய நம்மெல்லோருக்கும் இவ்வியல்புகள் உண்டு எனவும் - உணர்ச்சி வாயிலாக உணர்வதற்கு எவ்வளவோ நாட்கள் செல்லலாம். சீக்கிரம் பலன் கிடைக்காதது பற்றி மனந் தளர்ந்து இப்பயிற்சியை விட்டுவிட்டால், நாம் அதுவரை எடுத்துக்கொண்ட முயற்சிகள் யாவும் வீணே அவமாகும். நிச்சயம் நாம் சிறப்படைவோம் என்ற நம்பிக்கையோடு கூடிய தளராத பொறுமையே இப்பயிற்சியைக் கெடாது ஓம்பும் நீராம். நம்மகத்தில் முளைத்த உண்மைப் பயிர் - சிவப் பயிர் - வளர்தற்கு மிக்க ஆக்கமளிப்பது பொறை எனும் நீராகும்.

இந்நற்பயிர் செழித்து வளர்வதற்கு இடையூறுகளாக வருபவை எண்ணில. இவை முன் அகற்றப்பட்ட இன்மை எண்ணங்களும் தீக்குணங்களுமாகும். நமது அகமும் புறமும் தூய்மையாக இல்லாவிடின், இவை மறுபடியும் மனதைத் தாக்கிக் கலக்கம் விளைக்கும். இவை உள்ளே நுழையாதபடி தகவு எனும் வேலி கோலல் வேண்டும். நமது ஒழுக்

கம் குணம் முதலியன நன்மையாக ஆக வேண்டும். அன்பு, நீதி, மன்னிப்பு, நல்லுணர்ச்சி இன்ன பிறவுமே நமது பயிரைக்காக்கும் வேலியாகும். அகத்தூய்மை அவசியம்.

இன்னும் நாம் நினைப்பதும் செய்வதும் செம்மையாக இருத்தலும் வேண்டும். இறை இயல்பினின்றும் வேறுபட்ட எண்ணங்களும் செயல்களும் செம்மை யாகா. எங்கும் நிறைந்த, தன்மை, முற்றறிவு, பேரன்பு, சுகம் நிறைவு, ஒழுங்கு, அமைதியாதிய இறை இயல்பினின்றும் வேறு படாது நினைத்து, இயற்றி வாழ்தலே செவ்வியதாகும். இயற்கை நியதியின் பாற்பட்டு புறவாழ்வு நடாத்தி, செம்மையுள் நாம் நின்றால் தான் நன்மை படையலாம். புறத்தூய்மையும் நம்பயிருக்கு நற்காப்பு.

இப்படி ஒழுகிக் காத்துக் கிடந்தால் இறை உண்மையை நாம் உணரல் கூடும். நாம் யார் என்பதும், இறையின் இயல்பும், நமக்கும் அதற்கும் உள்ள தொடர்பும் விளங்காமற் போகா. இவ்வுண்மையை நாம் உணர்ச்சியாக அடையும்போது - அப்பயிர் மரமாகிப் பூத்துக் காய்த்துக் கனியும்போது - அக்கனிகளை நாம் சுவைக்கும்போது - அது எவ்வித மிருக்கும் என்பது அப்பொழுதுதான் தெரியும். அக்கனிகள் எல்லாம் அறிவு - எல்லாம் நிறைவு - எல்லாம் அமைதி - எல்லாம் சுகம் - எல்லாம் அன்பு - இன்பு என்ற பெயர்கள் உள்ளனவாய் இருக்கலாம்.

இந்நிலையை - சிவபுரத்தை - (Kingdom of God) கிட்டியவர் பருவுடல் தாங்கி நிற்கும்போது இயற்கைத்தாய் அவர்கட்கு ஏவல் புரியா நிற்பாள்; பசி வந்திட்டபோது இன்னமுது தருத்துவள். அப்போது பிணிகள் நாடா; இடாறுகா. (There shall no evil befall thee; neither shall any plague come nigh they dwelling.) "இன்பமே எந்நாளும் துன்பமில்லை".

"மெய்ம்மையா முழவைச் செய்து
விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாங் களையை வாங்கிப்
பொறையெனும் நீரைப் பாய்ச்சித்
தம்மையு நோக்கிக் கண்டு
தகவெனும் வேலி யிட்டுச்
செம்மையுள் நிற்ப ராகிற்
சிவகதி விளையு மன்றே."

என்று, தமிழ்மறைஞானத்தின் இயல்புகளைக் கூறும். களைற்ற இயற்கையோடிமைந்த செம்மை வாழ்வு நடாத்தி மனதினின்றும் பொய்யாயினவற்றைக் களைந்து மெய்மையைப் பதித்து, பொறையாம் நீரைப் பாய்ச்சி, அகப்புறத் தூய்மை வேலிகோலிச் சிந்தித் திருக்க விளைவது சிவகதியாம்.

அடுத்த இதழில் "பொய்" யின் இயல்பைச் சிந்திப்போம்.

பதினொராந் திருமுறை

பன்னிரு ஆசிரியர் இயற்றிய நாற்பது திவ்விய பிரபந்தங்கள் அடங்கியது. கலேஸ் காகிதத்தில் அழகிய பைகா டைப்பில் அச்சிடப்பட்டது. பதங்கள் பிரித்து அர்த்தம் தானே விளங்கும்படியான அடக்க விலைச் சுத்தப் பதிப்பு.

தனிப் பிரதி விலை அணு பதினொன்று; ரிஜிஸ்தர் தபாற்கூலி அணா ஆறு
எட்டுப் பிரதிகள் விலை ரூபா ஐந்து; ரிஜிஸ்தர் தபாற்கூலி ரூபா ஒன்று அணா பத்து.

சைவர்களாகிய உங்கள் முதற் கடமை இதை வாங்குவதே.

முருகவேள் புத்தகசாலை, இராயப்பேட்டை, சென்னை.

திருக்கோயில் வழிபாடும் சீர்திருத்தமும்

[திரு. பொன்னம்மாள், பி. ஏ., எல். டி.]

III

இவ்வாறெல்லாம் உருவ வழிபாட்டின் தீமைகளை நாம் கண்ணாரக் கண்டும், அவ்வழிபாடு மிகக் கீழ்த்தரமக்களதே என்பதை நம் பெரியாரிலும் பலர் எடுத்துக் காட்டியிருக்கவும், அது அறிவு வளர்ச்சிக் கொருதடையா யிருக்கிறதை ஓராது "ஆன்ம வர்க்கத்தில் சிலர் பலர்என் றவாறு கீழ்த்தரத்தி லிருப்பாருக்கு அது பயனளிக்கிறதென்றும், இன்னும் பல ஒவ்வாத சாக்குப் போக்குகளைக் கூறியும் திரிபவர் நம் இந்துமத பரிபாலனத்தைச் சேர்ந்த அறிஞர் சிலரிலும் காணப்படுகின்றனர். இதுமிக இரங்கத் தக்கதே. உலகில் தற்காலம் ஒளிமிளிர்ந்து ஓங்கிவளர்ந்து வரும் சாஸ்திரங்களில் பல, விக்கிரக வணக்கஞ் செய்பவரையல்லாத ஏனையோரின் மூலமாகவே தோன்றிச் சிறப்புற்று வருகிறதென்பதைச் சரித்திர ஆராய்ச்சி வல்லார் எளிதிற்காணலாம். அன்றியும் ஒரு காலத்தில் மிக உன்னத நிலையிலிருந்து இப்போது சிறிதும் இல்லாது இறந்து பட்டனவும், வரவர க்ஷீணித்துச் சுருங்கி வருவனவுமான தேசங்கள் உருவ வழிபாட்டினை உயர்த்தி வழுத்தும் கோட்பாட்டினை யுடையனவாயிருந்த தேயங்களே என்பது தெள்ளிதில் விளங்கும்.

உருவ வழிபாடு எல்லா வழிபாட்டினும் கீழ்த்தரமானதே என்பதை நன்கறிந்த பெரியாரொருவர் அதனைப் பிற மதத்தினர் எள்ளுகின்றனர் என்ற ஓரே காரணத்தினிமித்தம் தம்வாக்கை நிலை நிறுத்துமாறு அவ்வழிபாடு சிறந்ததெனக்கூறுமிடத்து 'அது தூரதேயஞ் சென்றிருக்கும் ஒருவன் தன்னை விட்டுப் பிரிந்திருக்கும் தமதன்னையின் படத்தை அன்னையென்றே பாவித்துப் பூசிக்குந் தன் அன்பைக் காட்டுவதை யொக்கும்' என்றார். என்னை? 'இதோ சதா காலமும் நான் உங்களுடனே இருக்கிறேன்' என்று கூறிய கிறிஸ்துவின் கூற்றினை நமது சிவ விஷ்ணு பக்தரில் எத்தனையோபேர் தங்கள் சொந்த அநுபவத்திற் கண்டு பாடியிருக்கின்றனர். தம் அன்புள்ள அருந்தந்தையைத் தம் எதிரே ஒவ்வொரு நிமிஷமும் வைத்துக் கொண்டு அவரை ஏறெடுத்தும் பாராமல் அவர்போன்ற பாவையை நிறுத்தி அன்பினை வெளிக்காட்டும் புதல்வரை அத் தந்தையர் காணின் அவர் மனதை எத்தனையாக வருத்தும்? அத்தகைய புதல்வரைப் பிறரும் காணின் ஏதோ சித்தப் பிரமை கொண்டவர் என அன்னாரைக் கருதி நகைப்பரே யொழிய பெற்றோர் மீதுள்ள அன்பினால் அவ்வாறு செய்கின்றனர் எனக் கூறுவார் யார்?

இன்னும் "சிறுவர்க்கு முதன் முதன் பொருட்களைக் கொண்டு கற்பிப்பதற்கு ஒப்பாகும்" எனக் கழறுவாருமுளர். என்னை? சிறுவர் என்றும் சிறுவரன்றே. அச்சிறுவர் தாம் அப்படியே பொருட்களைக்கண்டு கல்விபயிலக் கற்றும் உயர்ந்த வகுப்புக்கு ஏற ஏற சாஸ்திரவாயிலாக அப்பொருளை உணர்ந்து முடிவில் எத்திறப்பட்ட திட, திரவ, வாயுப் பதார்த்தங்களையும் கூறு பாடு செய்து, குணம் குறித்து நூலெழுதும் சீரிய ஆற்றலையும் அடைந்து விளங்க வேண்டாவோ? அதுவன்றோ அறிவின் தன்மை? பெற்றதைப்பெருக்கிப் பிறர்க்குணர்த்தும் ஆற்றலையுரைக்கும் கல்வியே உயரியது. அப்படிக்கின்றி பாலர் வகுப்பிலேயே தம் அரும் குழவிகள் பல வருடங்கழிக்கக் கண்ட பெற்றார் அத்தகைய தம் புதல்வர் மீது வருத்தமும், கோபமும் இரக்கமுங் கொண்டு உளம்நொந்து மடிவாரன்றோ! குழந்தைகளின் உடல் வளர்ச்சிக் கேற்பவே அறிவுவளர்ச்சியும் ஆன்ம வளர்ச்சியும். எத்தகைய தேச வளர்ச்சியும் அன்ன பெற்றித்தே. பூரணசுகமுடைய புதல்வரின் லட்சணம்யாது? இவ்வுலகின்கண்

சிசுவாயுதித்துச் செங்கீரையாடி, தொட்டிலிற் பழகி, சப்பாணி கொட்டி, முத்தமளித்து, முன்னே நடந்து, முழுமதி கண்டு களித்து, சிற்றில் சிதைத்து, சிறுபறை கொட்டி, சிறுதேர் உருட்டி, செல்வச் சிறாராய்ப் பள்ளிக்குச் சென்று, பலகலை கற்று, பாங்குடன் பலமுடைக் காளைகளாகி, பாரினிற் சென்று, பரிவுடன் பெருஞ்செயல் பலவும் ஆற்றித் தம்புகழுடம்பை நிறுத்திப் பூமியில் மிளிர்வதன்றோ? இத்தகைய செல்வப் புதல்வரை யன்றோ கண்ணுறுந் தோறும் கண்ணுறுந்தோறும்,

“ஈன்றபொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோனெனக் கேட்டதாய்”

என்றும்,

“இவன் தந்தை என்னோற்றான் கொல்!”

என்றும் தெய்வநாயனார் கூறியவாறு இருமுதுகுரவரும், பெருநில மாந்தரும் களிப்பெய்திக் கொண்டாடுவர்!

இதற்கு மாறாகத் தம் அன்பின் கனிகள் பல்லாண்டு சென்றும் பிள்ளைப் பருவத்திலேயே தங்கி, சிறுத்து, சிதைவுறக் காணப்படின் பெற்றோர் ஆற்றியிருப்பரோ? அவ்வளர்ச்சி குன்றிய தன் காரணத்தை யறிந்து பரிகாரஞ் செய்யுமாறு உலகில் யாவரினும் மேம்பாடுடைய அரிய வைத்திய நிபுணரை நாடி, தம் உடல், ஆவி, பொருள், யாவற்றையும் தியாகம் செய்தேனும் தம் குலக்கொழுந்து வளர்ந்து பெருகிப் பூவும் காயும் கனியுமாய்த் தழைப்பதைக் காணவேண்டுமென ஆசியாரோ? இம்மண்ணுலாய பெற்றோர் தம் குழந்தைகளின் வளர்ச்சியின்பொருட்டு இத்தனை அன்பும் அநுதாபமும் கொண்டு முயல்வரெனின், நம் விண்ணோனாகிய வேதியன் தம் மக்கள் பல்லாயிரவாண்டுகளாக ஒரு பாழுங் குழியில் பதிந்து மாண்டுபோவதைக் காண எத்தனையாக மனமுடையார்? ஆகலின் நம் பெரியார் அன்னோரைப் பிரகாசிப்பித்து, அவரது அறியாமையையும் அஞ்ஞானத்தையும் நீக்கி மெய்ப்பொருளான அன்பின் கனி அருள் நாதனைக் கண்டு ருசித்து ஆனந்தத்தில் சுகித்திருக்கச் செய்வது தம் பொறுப்பும் கடமையுமென்று உணர்தல் வேண்டாமோ? அப்படிக்கின்றி அறிஞரான தலைவரே ஆத்மாக்களை இருளிலேயே நிறுத்தி அஞ்ஞானத்திற்கு அடிமைப்படுத்தி நிற்கும், ஒன்றுக்கும் உதவாத உருவ வழிபாட்டினை நிலை நிறுத்திச் சிறப்பிக்க முயல்வது ‘வேலியே பயிரை யழி’த்ததற்குச் சமானமா யிருக்கின்றதன்றோ! பலவீனரையும் அறிவீனரையும் தாங்கல் சான்றோர் கடன். சங்கீதக்காரன் கூறுவதுபோல் நல்ல மேய்ப்பர் தம் ஆடுகளைப் “புல்லுள்ள விடங்களில் மேய்த்து அமர்ந்த தண்ணீர்களண்டைக்கு நடத்தி” அவை எவ்விதத்திலும் தாழ்ச்சி யடையாதிருக்கச் செய்தலன்றோ கிரமமாகும்! அவ்வாறு தம் கடனைச் செய்யாது நிர்விசாரமாயிருப்பதோடு மெலிந்த மந்தையை இன்னும் மெலியச் செய்யும் பாழான பள்ளத்திலேயே அழுத்திக் கெடுக்க அவர் விரும்புவராயின் “உன் உக்கிராணக்கணக்கை யொப்புவி” என்று நல்ல மேய்ப்பரான இறைவனிடமிருந்து கட்டளை பிறக்குங்கால் யாது செய்வரோ! “யாரிடத்தில் அதிகம்கொடுக்கப்படுகிறதோ அவரிடத்திலிருந்து அதிகம் கேட்கப்படும்” ‘அறியாமற் செய்கிறவன் கொஞ்சம் அடிகள் அடிக்கப்படுவான்! அறிந்து செய்கிறவன் அநேக அடிகள் அடிக்கப்படுவான் என்று கிறிஸ்து கூறினது இங்கு எம் ஞாபகத்திற்கு வருகிறது. தமது ஆதரவின் கீழ் ஒப்புவிக்கப்பட்ட பலவீனரையும், அறிவீனரையும் ஆன்ம குருடர், சப்பாணி, ஊமைகளையும் மேன்மேலும் உயர்ந்த வெளிச்சத்திற்கும், வளர்ச்சிக்கும் படிப்படியாய் நடத்த மதாசிரியரும், பெரியாரும் சாவதானமாயிருக்கத் தவறும்போது எல்லாவற்றையும்பார்த்தறிந்துசோதித்தாளரும் பரமதகப்பன் அடிக்கடி அவரை எச்சரிக்கிறது எம் செவியில் இடையறாது தொனித்து நிற்கிறது.

அவைகளிற் சில இங்குக் கூறுதும்: "என் தாசனையல்லாமல் குருடன்யார்? நான் அனுப்பிய தூதனையல்லாமல் செவிடன் யார்? கர்த்தருடைய ஊழியக் காரனையல்லாமல் அந்தகன் யார்? நீ அனேகக் காரியங்களைக் கண்டும் கவனியாதிருக்கிறாய்"—ஏசாயா 42: 19. "பரிசுத்த முள்ளதற்கும் பரிசுத்த மில்லாததற்கும் வித்தியாசம் பண்ணாமலும், அசுத்த முள்ளதற்கும் அசுத்த மில்லாததற்கும் உண்டான வேற்றுமையைக் காண்பியாமலும் இருந்து, என் ஜனத்தைப் பட்சித்து, வேதத்துக்கு அநியாயம் செய்கிற மேய்ப்பர் அவர்கள் மத்தியில் நான் கனவீனம் பண்ணப்படுகிறேன்"—எசேக்கியேல் 22: 26—27; "கட்டையைப் பார்த்து 'நீ என் தகப்பன்' என்றும், கல்லைப்பார்த்து 'நீ என்னைப் பெற்றாய்' என்றும் சொல்லுகிறவர்களும், அவர்கள் ராஜாக்களும், அவர்கள் பிரபுக்களும், அவர்கள் ஆசாரியர்களும், அவர்கள் தீர்க்கதரிசிகளும் வெட்கப்படுவார்கள்"—எரேமியா 2: 26. "அவனவன் தன் தன் நரகலான விக்கிரகத்தையும் அருவருப்பையும்விட்டுத் திரும்பாதிருந்தால் .... தீர்க்கதரிசியினிடத்தில் விசாரிக்கிறவனுடைய தண்டனை எப்படியிருக்கிறதோ அப்படியே தீர்க்கதரிசியின் தண்டனையும் இருக்கும்"—எசேக்கியேல் 14: 6+10; "என் பிள்ளைகள் என்னை விட்டுப் போய்விட்டார்கள். மேய்ப்பர்கள் மிருக குணமுள்ளவர்களாகிக் கர்த்தரைத் தேடாமற் போனார்கள். ஆகையால் அவர்கள் காரியம் வாய்க்காமற்போய் அவர்கள் மந்தையெல்லாம் சிதறடிக்கப்பட்டது"—எரே 11 20 4.

இவற்றையெல்லாங் கண்டும் கேட்டும் இன்னும் உருவ வழிபாட்டைச் சிறப்பிக்கும் கருத்தும் விருப்பும் இருக்குமாயின் அத்தகைய பெரியாருக்கு நாம் ஒன்று கூறுவோம்.

"அவனருளே கண்ணாகக் காணின் அல்லால்
இப்படியன், இந்நிறத்தன், இவ்வண்ணத்தன்
இவனிறைவன் என்றெழுதிக் காட்டொ
ணாதே"

எனத் திருத்தாண்டகத்தில் கூறப்பட்டிருக்கும் இறைவனாகிய முழுமுதற் பொருள் ஒன்றையே குறிப்பாய்க் காட்டும்படியான ஓரே உருவமே எக்கோயிலிலும் காணப்படலாமே! குற்ற மிகுதியால் இறந்துபட்ட பேய்த்தனமுடைய ஆவிகளுக்கும், வீரராயிருந்து உஜ்ஜீவித்துச் சென்றோர்க்கும், நம்போல் பாவிகளாயிருந்து பதவி பெற்றோர்க்கும் உருவங்கள் சமைத்துக் கோயில்களில் நிறுத்திக் கும்பிட்டு வருதல் எத்துணையும் பொருந்தாதென்க. இதுமாத்திரமோ! ஒரு பக்தன் புலம்புவதுபோல்,

"ஊரினிற் பெயர்கொண் டிருந்து செத்தவ
ளவுபோய் மடிந்த காமுகர்க்கும் [ர்க்கும்
உயிர்விடவலிய நான்று கொண்டவ
உகந்துதீய்ப் பாய்ந்த நீலிகட்கும்
பாரினில் கணவன் தனக்கடங்காமல்
பதைத்திட நஞ்சினைத் தின்றும்
படுங்கயத்தினிலும் ஆற்றிலும் வீழ்கப்
பசாசுருவான பாவிகட்கும்
போரினிற் படையில் பட்டவீரருக்கும்
புராதனத் திருந்த மன்னவர்க்கும்
புலையர் சக்கிலியர் குறவர்க ளீனப்
புதரையர் கழுவி லேறிகட்குந்
தேரினும் கோயிற் புறத்திலும் நடக்குந்
தெருவினும் சிலையடித் திருத்தித்
தேவனென் றிருந்த பாவியான்"

"என்றதெல்லாம் போதாதென
அரிசிவன் பிரமனைங்கர றுறு
முகன் சதாசிவன் மயேசுரனே
டையனார் வீர பத்திர னிருளன்
அனுமந்தன் கால சங்கரன்
பொருதடி மாடன் கருப்பண னிடும்பன்
புத்தனார் காத்தவ ராயன்
பொம்மன்ஒருட்டியச்சின்னுடன் சக்கதேவி
பொன்னியங் காளி கங்காளி
பெரியமா காளி ரணபத்திர காளி
பேச்சிசா முண்டியுத் தண்டி
பில்லிவாய்க் குறளி எகரி வீரி
பிடாரிகாட் டேரிதூத் தேறி
எமகண்டி சாமளை துற்கை
இன்னமும் அனந்தம் பேய்களை"

யும், இதுவும் போதாதென்று,

"சூரியன் வடிவோ சந்திர னுருவோ
தொகையிலா வான்பற வைகளோ

துன்னிய காற்ருே வன்னியோ முகிலோ
தோன்றிய பூமியோ மண்ணே
பாரினில் ஊர்குஞ் சீவனே செந்தோ
பற்பல நாலுகால் விலங்கோ
பசும்புலோ செடியோ அனந்த தாபரமோ
பயோததி நீநூரங் இனமோ
ஏரியோ குளமோ ஆறதோ நதியோ
எண்ணிலா மலைகளோ சுனையோ
இடங்களோ விசேஷ தலங்களோ கோடி.
இத்தனை இழவுமல் லாமல்
காரிய மெனவே காகலை நீரைக்
கலந்தபெண் குறியோ டாண் குறியைக்
கடவுளென் றிருந்த மடையரு னையா
கருணைசெய் காக்கும் ரட்சகனே"

என்று சாஸ்திரியார் கூறும் வண்ணம் நம் தென்னிந்தியாவில் வழுத்தப்படும் தெய்வங்களுக்கோர் கணக்குண்டோ! ஐயகோ! இஃதெத்தனை கோரமான கொடுமை! "நோக்கிடவிதியிலாத" இத்தனை நிசனானவஸ்துவைக் கடவுளென அடிதொழின் உருவிலா உன்னத ஜோதியின் அன்பையும், அருளையும், நீதியையும், பரிசுத்தத்தையும், நிறைந்த ஜோதியையும், சுத்தமகத்துவத்தையும், சுயதந்துவத்தினையும் நம்மக்கள் எல்லாரும் காணுவ தெக்காலமோ! கல்வி கற்றறிந்த நல்லவர் இதனைக் கண்டறியார் கொல்! வானம் பூமியாவையும் படைத்த மட்டில்லாச் சருவ வல்லவன் மகத்துவ தேவன், ஜெகத்தினில் ஈனர் வருந்தமேனியில் இருப்பனே! இவ்வாறு சத்தியங் தப்பி அவரவர்க்கேற்ற சாமிகள் செய்யவுந்தான் தகுமோ! ஞானமுள்ளோர் நம்மில் இல்லையோ! நீதி, நடுவிலாத் தேயமோ ஈது! நம்முடைய கையாற் சமைத்த பாவைகள் உருவங்கள் நமக்குப் பதவியைத் தருமோ! அப்படியிருக்கக் கதிதரும் கர்த்தனை விட்டு அநீத வீண் பொருளைக் கை தொழுவாரைக் கண்டனம் பண்ணி, கனிந்த அன்புடன் கைகொடுத்து நடத்திக் "கருதரிய சிற்சபையில் ஆனந்த நர்த்தமிடும் கருணாகரக்கடவு" ளண்டை நடத்தல் நம்பெருத்த கடனென்று கற்ருேரே உணர்வீர். விக்கிரகங்கள் ஒருபோதும் நம்மக்களைக் கற்பிப்பதில்லை. கல்விக்கோர் தடையே அவைகள். உருவழி பாட்டினைத் தாண்டிச் செல்லாருக்குப் பிறர் கூறும் எத்தகைய நல்லறிவும், நல்லுணர்வும், நல்லொளியும் பயன் செய்யாவெனக் கண்ட அப்பரும்,

"செத்துச் செத்துப் பிறப்பதே தேவென்று
பத்தி செய்மனப் பாறைகட் கேறுமோ?"

என்றார்.

"வான்கெட்டு மாருதம் மாய்ந்து
அழல் நீர் மண் கெடினும்
தான் கெட்டலின்றிச்
சலிப்பறியாத் தன்மைய"

னை உலகுக்கெல்லாம் ஏக வஸ்துவாகிய பராபரனின் பண்பை நாழும்பெற்று அவருடன் நித்தியமாய் ஜீவித்திருக்க விரும்பிடில் அவரேயே யன்றிவேருென்றின் உருவையும் உற்றுநோக்கி உள்ளத்தாலும் தியானித்தல் தகாதே.

"மனிதன் சிரத்தை (=நம்பிக்கை) மயமானவன். யாவருக்கும் தத்தம் உள்ளியல்புக் கொத்த நம்பிக்கை யமைகிறது. எவன் எந்தப் பொருளில் நம்பிக்கையுடையவனே அந்தப் பொருளே தானுகிருன்"—பகவத்கீதை 17-ம் அதிகாரம் 3-ம் சுலோகம்.

என்று பகவத்கீதையும் பகர்கின்றதே. இதன் உண்மையை அநுபவார்த்தமாய்க் கண்ட கிறிஸ்தவ பக்தர் தம் மந்தையின் ஆடுகளைத் தெய்வந் தன்னைக்கு நேராய் வழி நடத்தும் பெருநோக்குடையாராய், அச்சபையார் உற்று நோக்கி யுள்ளத்தில் உள்ளும்படி வேருெரு உருவத்தையும் கையாற் சமைத்து வைக்க விருப்பிலராய், "என்னைக் கண்டவன் என் பிதாவைக் கண்டான்" எனத் திருவுளம் பற்றின கிறிஸ்துநாதரையே உள்ளத்தினில் நிறுத்தி "சுயாதீனப் பிரமாணமாகிய பூரண பிரமாணமான கிறிஸ்துவை உற்றுப் பார்த்து அதிலே நிலைத்திருக்கிறவன் கேட்கிறதை மறவாமல் அதற்கேற்ற கிரியை செய்கிறவனுயிருந்து, தன் செய்கையிலே பாக்கியவானுயிருப்பான்"—யாக்கோபு 1 : 25. என்று போதிக்கின்றனர்.

"ஐம்பெரும் பாதகர்கள்"

[திரு. ஆரியூர் - வ. பதுமநாப பிள்ளை]

"ஐம்பெரும் பாதகர்கள்"—என்ற தலைப்பைக் கண்டவுடனே, எண்ணிறந்த நீதிநூல்களிலும் சன்மார்க்கப் பிரசங்கங்களிலும் முறையே கண்டும் கேட்டும் பெரிதும் சலித்துப்போன கர்நாடக விஷயமென்று உங்களிற் பலர் இக்கட்டுரையைத் தள்ளிவிட்டு அடுத்த கட்டுரைக்குப் போய்விட நினைப்பீர்களென்பது எனக்குத் தெரியும். புதுப் புது விஷயங்களைப் படிப்பதிலேயே ஆர்வம் கொண்டிருப்பவர்களுக்கு, தெருவில் விளையாடிக்கொண்டிருந்த பருவத்திலேயே தெரிந்துகொண்டுவிட்ட விஷயங்களை ஆராய்ச்சிமிகுந்த இக்காலத்தில் கட்டுரைகள் வாயிலாகப் படிப்பது எட்டிக்காய்ச்சட்டினிபோன்றே தோன்றும் என்பதும் எனக்குத் தெரியும். அத்தகையவர்கள் தங்களது ஆராய்ச்சிக் கண்கள் கொண்டு இக்கட்டுரைத் தலைப்பை நன்கு கவனித்துப் பார்ப்பார்களானால், இக்கட்டுரையைப் பகிஷ்கரித்துவிடத் தீர்மானித்து விடமாட்டார்கள் என்னும் நம்பிக்கை எனக்கு உண்டு. 'பஞ்சமா பாதகர்க'ளைப் பற்றிய நான் விவரிக்கப் புகுகிறேனேயல்லது, 'பாதகங்க'ளைப் பற்றியல்ல என்பதைக் கவனிக்க வேண்டுகிறேன். 'கொலையினர்', 'களவினர்', 'கள்ளினர்', 'காமனர்', 'பொய்யினர்' முதலிய ஐவர்களது வீரப்பிரதாபங்களை யான் விவரிக்கப் புகவில்லை என்று முதலிலேயே தெரிவித்துக்கொண்டுவிடுகிறேன். நான் வெளியிடப்போகும் 'ஐம்பெரும் பாதகர்கள்' உங்களது வெறுப்புக்கும் [illegible]த்திற்கும் பாத்திரர்களாவதற்குப் பதிலாக, உங்களது அன்புக்கும் [illegible]க்குமே உரியவர்களாகக் கூடியவர்களாவர். அவர்கள் எவர்களாக இருக்கக்கூடுமென்று உங்களால் சொல்லமுடியுமா? உங்களுக்குத் தெரியாவிடில், உங்கள் கைகளிலுள்ள இப் பத்திரிகையை மூடி வைத்துவிட்டு, கண்களை மூடிக்கொண்டு அவர்கள் எவர்கள் என்பதைத் தெரிவிக்குமாறு சத்தியலோகத்திலுள்ள கலைமகளைத் தியானித்துப் பிரார்த்தியுங்கள். பாவம்! கலைமகள்கூட உங்களுக்கு உணர்த்தவில்லையா? ஆமாம்! தான் வீற்றிருப்பதின் இனத்தினரின் இரகசியங்களை உங்களுக்கு வெளியிட்டுரைக்கக் கலைமகளுக்குத் திருவுள்ளமில்லைபோலும்!

காலையில் எழுந்திருந்ததும் படுக்கைக் காப்பி; பல் துலக்கியவுடன் பலகாரமும் காப்பியும்; பதினொரு மணிக்கெல்லாம் சுகபோஜனம்; மாலை நான்குமணிக்குச் சிற்றுண்டியும் காப்பியும்; இரவு 8 மணிக்குச் சாப்பாடு; ஒன்பது மணி முதல் சீட்டாட்டம் அல்லது கிராமபோன் கீத சிரவணானந்தம். இவ்வாறு தானே உங்களிற் பெரும்பாலோரது தினசரிக் காலப்போக்கு இருந்து வருகிறது! இடை நேரங்களில், மேஜையும் காகிதங்களுமே உங்களோடு உறவாடும் தோழர்கள்! இத்தகைய உங்களுக்கு, சிந்தனா சக்தியைப் பயன்படுத்திக் கொள்ள ஓய்வு வாய்ப்பதேது? செயற்கைக் காட்சிகளிலேயே உங்களது சிந்தை படிந்து கிடக்கிறது! பெயரே தெரியாத மரங்கள் சிலவும், மலர்களே இல்லாத மரங்கள் சிலவும், மணமே இல்லாத 'மலர்க'ளையுடைய மரங்கள் சிலவும், 'குட்டநோய்' பிடித்தவை போன்ற 'குரோட்டன்ஸ்கள்' சிலவும் ஓரிடத்தில் இருந்துவிட்டால், அவ்விடத்திலேயே உங்களுக்கு 'இயற்கைக் காட்சி இன்பம்' கிடைத்துவிடுவதாக உங்கள் எண்ணம்! 'பார்க்கு'களாம் 'பார்க்குகள்'! அவற்றைப் பார்க்கும்போது, உண்மை இயற்கை இன்பத்தில் திளைப்பவர்களுக்குச் சிரிப்புதான் உண்டாகிறது!

'காடுகளாகக் கிடந்த இடங்களை நாங்கள் வந்து அழித்து நகரங்களாக மாற்றி இந்நாட்டினரை 'நாகரிகர்க'ளாக்கி யிராவிட்டால், இந்தியர்கள் பலரும் வனவாசிகளாகவே வாழ்வார்

கள்'—என்று அந்நியர்கள் - இல்லை கலிகாலத் தேவர்கள் இந்திய நாட்டினருக்குத் தாங்கள் செய்த 'கைம்மாறு கருதாத்' திருத்தொண்டைச் சிறப்பித்துக் கூறக்கூடும். ஆனால், முற்காலத்தில் காடுகளில் இந்நாட்டினர் அனுபவித்த இன்பத்தை, தற்காலத்தில் நாகரிகம் மிக்க நகரங்களில் கூட அனுபவிப்பதற்கில்லையே!

இயற்கைக்கு மாறுபட்டதையே ஓர் ஆச்சரியக் காட்சியாகக் கருதி, நீங்கள் அசையும் படக்காட்சிகளையும் பேசும் படக்காட்சிகளையும் கண்டு களிக்கலாம்; காட்டுக் கைத்தொழில்களில் மண்ணைப் போட்டு - எண்ணிறந்த ஏழைகளைத் தினந்தோறும் வாட்டி - மனிதனை உடல் உழைப்பை வெறுக்கும் சோம்பேறியாக்கி ஆசைப் பேய்க்கு ஆட்படுத்திவரும் விசித்திர இயந்திரங்களைக் கண்டு வியந்து மகிழலாம்; தங்களது முழுத்திறமையையும் வெளிப்படுத்த எண்ணி, ஆவேசங்கொண்டவர்களைப்போலத் தலைமயிர் அவிழ்ந்தாடக் கண்கள் புரண்டாடக் கைகள் தாளம் போடத் தங்களது சங்கீத ஞானத்தை வெளிப்படுத்துவோரது பாட்டுகளைக் கேட்டு, நீங்கள் சிரக்கம்பமும் கரகோஷமும் செய்து மகிழலாம். ஆனால், பச்சைப் பசேலென்று செழித்து வளர்ந்த பலவகைப்பட்ட அழகிய மரங்கள் நிரம்பியுள்ள பலவித நிறங்களால் காண்போர் கண்களுக்கும், மனோகரமான இனிய மணத்தால் முகர்வோர் மூக்குக்கும், மிக்க மிருதுத்தன்மையினால் தொடுவோர் கைகளுக்கும் ஒருங்கே பெருமகிழ்வூட்டக்கூடிய பலவகை மலர்களும் மதிப்பாரின்றி உதிர்ந்து சிதறிப் பரவி இரத்தினக் கம்பளம் பரப்பப்பட்டதுபோலிருக்கிற பசும்புல் தரையை உடைய - உடலையும் உள்ளத்தையும் ஒரேசமயத்தில் குளிர்விக்கக்கூடிய இனிய பூங்காற்று வீசிக்கொண்டிருக்கிற - எங்கு நோக்கினும் இயற்கைப் படைப்பின் ஒப்பற்ற அற்புத அழகைத் தோற்றுவித்துக்கொண்டிருக்கின்ற - ஒரு பூஞ்சோலையிலே புகுந்து உலவும் பாக்கியம், உங்களுக்கு எப்பொழுதேனும் வாய்த்தது உண்டோ? அத்தகைய பாக்கியம் ஒருநாள் கூட உங்களுக்குக் கிடைத்திராவிட்டால், எவ்வளவு விவரித்துச் சொன்னாலுங்கூட நான் கூறப்போகின்ற நூதன பஞ்ச மகா பாதகர்களது சக்தி எத்தகையதென்பதை நீங்கள் நன்கு தெரிந்து கொள்வது அரிதே.

இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்பு, இத்தென் தமிழ்த்திருநாட்டில் வாழ்ந்திருந்த ஒரு மாது சிரோமணி கண்ட காட்சியை இனி விவரிக்கத் தொடங்குகின்றேன். கண்களையும் கருத்தையும் ஒருங்கே கவர்ந்து, மண்ணுலகத்தினரின் மனோரதத்தைக் கந்தருவ உலகில் செலுத்தி இன்பமயப்படுத்தக்கூடிய பூஞ்சோலை ஒன்றிலே - தழைத்துச் செழித்து வளர்ந்துள்ள மாமரம் ஒன்றிலே - நீலக்கருங்குயில் ஒன்று உட்கார்ந்து கொண்டு, கந்தருவர் சங்கீதம் எந்த விதமாக இருக்குமென்பதை இந்த உலகினருக்கு உணர்த்துவதுபோல், தனது இணையற்ற இன்பக் குரலிலே பாடிக் கொண்டிருக்கிறது. அதன் பாட்டின் இனிய ஓசையிலே ஈடுபட்டு இன்பவயப்பட்டு நிற்கும் சிந்தையை உடையவர்கள், அச்சிந்தையை அப் பாட்டின் பொருள் என்னவென்று கண்டு பிடிப்பதில் செலுத்தி வீணாகக் குழப்பிக்கொண்டு விடமாட்டார்கள். கந்தருவ பாஷையையும் கந்தருவ கானத்தையும் இந்த உலகத்திலே, எந்த கலாசாலைக்குச் சென்று கற்றுக் கொள்ளக்கூடும்? ச-ரி-க-ம-ப-த-நி எனும் ஸப்த ஸ்வரங்களையும் புரட்டிப் புரட்டிப் பாடுவதே 'சங்கீத ஞானம்' என்று நினைத்துக் கொண்டிருப்பவர்களது நெஞ்சை, நீலக்குயிலின் மோகனப்பாட்டு சிறிதளவும் உருக்கக் கூடியதாகாது என்பது கேவலம் உண்மையே. ஆயினும், அப்பாட்டைக் கேட்டு அகம் கரைந்து உருகி நிற்கக்கூடிய உள்ளம் உடையவர்களாகச் சீரிய மெய்க் காதல் உலகத்தில் வாழ்ந்தோரும் சிலர் இருந்தனர் என்னும்

உண்மையை, அவர்கள் அமைத்துச் சென்ற சொற்சித்திரங்களே இன்றும் நமக்கு விளக்கிக் காட்டக்கூடும்.

"மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்"— என்று சூளுரை கூறி, நீலமேனி நெடியோனாகிய திருமாலையே தனக்கு உரிய மணவாளனாக மனத்திற் கொண்டு, அப்பெருமானைக் கூடிக் களிக்கும்பேறு எப்பொழுது வாய்க்குமோ என்று ஏங்கி நிற்கும் தலைவி, இருந்த இடத்திலேயே இருந்து கொண்டிருப்பதால் மேன் மேலும் பெருகுகிற மனச்சஞ்சலத்தை வெளியிற் சென்று உலவி வருவதாலேனும் ஒருவாறு ஆற்றிக் கொள்ளலாம் என்று எண்ணியவளாய்ப் பூஞ்சோலை ஒன்றை அடைகின்றாள். தனது தலைவனது பிரிவால் விளைந்த துயரைப் பொறுக்க முடியாமல் மேனி பசந்து அகம் கரைந்து உருகுகிற தலைவியின் செவிகளிலே, மாமரத்தில் அமர்ந்து எத்தகைய கவலையுமின்றி உற்சாகத்துடன் பாடிக்கொண்டிருக்கிற நீலக் குயிலின் மோகனப்பாட்டு கேட்கிறது; தலைவி தலை நிமிர்ந்து நோக்குகிறாள்; தனது மனதிற்கு மகிழ்வூட்டக் கூடிய தலைவனைப் பிரிந்து படும் துன்பம் தாங்க முடியாமல் தான் மட்டும் அகம் கலங்கி நிற்க, தான்படும் துன்பத்தில் சிறிதளவும் அநுதாபங் காட்டாததோடு தன்னைப் பரிகசிப்பது போலும் களிப்போடு கூவுகிற குயிலின் கொடுமை கண்டு, தலைவியின் மனம் குமுறுகிறது; சீற்றமும் வெறுப்பும் கலந்த நோக்குடன் அக்குயிலை நோக்கி, அவள் பின்வருமாறு கூறத் தொடங்குகிறாள் :—

"பெண் வருத்தம் கண்டு பேயும் இரங்கும்"—என்று பலர் சொல்லக் கேட்டிருக்கின்றேன். ஓ! காலனைப் போலும் கருநிறம் படைத்த கருணையற்ற குயிலே! உன் மனம் பேயின் மனதைக் காட்டிலும் கொடியதாக இருக்கிறதே! நான் படும் துயரைக் கண்கூடாகக் கண்டும், சிறிதளவும் இரக்கமின்றி உனது மோகனப் பாட்டால் எனது துயரத்தினை மேன்மேலும் வளர்க்கவும் துணிவு கொண்டுவிடக் கூடியவாறு, உனது மனதை இன்று கொடுமை மிகுந்ததாக மாற்றிய இறைவன், முன்பு இனியதாக இருந்த உனது குரலையும் இன்று கொடியதாக மாற்றிவிட்டான்போலும்! நான் எனது தலைவரது பிரிவாற்றாது படுகிற துன்பம், உனக்கு இன்பமாகத் தோன்றுகின்றதா? உனது காதலியோடு கூடிக் குலவும் காதற்செருக்கு, உனது அறிவையே மறைத்து விட்டது போலும்!

உனது துணைவியை நீ பிரிய நேர்ந்தால், உன் மனம் எவ்வளவு பாடுபடக் கூடுமென்பதைச் சிறிதேனும் சிந்தித்துப் பார்த்தாயா? உள்ளத்தைக்கொள்ளை கொண்ட அன்பரைப் பிரிவதனால் உண்டாகும் துக்கத்தை நீ அறியாயோ? நானும் எனது ஆருயிர்த்தலைவரும் இச்சோலையிலே கூடிக்குலவிக் களித்திருந்த காலத்திலே, எங்கள் இருவரையுங் கண்டு இன்பக் கடலில் ஆழ்ந்த நீ, என்றென்றும் நீங்கள் இருவரும் ஒருவரையொருவர் விட்டுச் சிறிதும் பிரியாது சேர்ந்திருந்து வாழவேண்டும் என்று எங்களை வாழ்த்தி மகிழ்வு பொங்கக் கூவிய நீ, எப்பொழுதும் எனது இன்பத்தை மேன்மேலும் வளர்ப்பதாக உனது மோகனப்பாட்டால் உணர்த்திய நீ இன்று முற்றிலும் வேறு குயிலாக மாறிவிட்டாய்! நீ நடித்த நடிப்பும் வாழ்த்திய வாழ்த்தும் பாடிய மோகனப்பாட்டும், இன்று முற்றிலும் பொய்த்துவிட்டன! அந்தோ! உனது மேனியைப் போன்றே உனது உள்ளமும் கருத்துவிட்டதோ? உனது பொய் எத்தகைய பெரும் பொய்! எனக்கு ஆசை காட்டி மோசம் செய்த அநியாயப் பொய்!! நினைக்க நினைக்க என் நெஞ்சைக் குமுறச்செய்யும் கொடும் பொய்!!! சீ! சீ!! நீயும் ஒரு காதல் இன்பத்தை அநுபவிக்கிறாயா? எனது காதலரது கண்ணுக்கினிய கருநீலநிறம் உனக்கேன்?"

இவ்வாறு ஐம்பெரும் பாதகர்களுள் முதற்பெரும் பாதகனாகிய குயிலைப்

பெரிதும் வெறுத்துப் பழித்துரைத்த தலைவி, பின்னும் அங்கு தங்கியிருக்க மனமற்றவளாய்ச் சற்று நடந்துசெல்கிறாள். சிறிது தூரம் சென்றபின், அவள் கண்ட காட்சி அவளை அசைவற்று நிற்கச் செய்துவிடுகின்றது. பத்துப் பன்னிரண்டு ஆண் மயில்களும் பெண் மயில்களும் வானத்தில் செல்லும் குளிர்ந்த கருமுகில்களைக் கண்டு குதூகலங் கொண்டு கூத்தாடுகின்றன. அவற்றில் ஆண்மயில்களெல்லாம் காண்போர் கண்களையும் கருத்தையும் மயக்குகிற ஒப்பற்ற பேரழகு வாய்ந்த தத்தம் தோகையை விரித்து ஆடுவதைக் கண்ட பெண்மயில்கள், அத்தகைய அற்புதத்தோகை தங்களுக்கு இல்லாமையால் தாங்கள் ஆடுவது ஆண்மயில்களின் ஆட்டத்தைப்போல அழகாக இல்லை என்பதைக் கண்டு, மிக்க மனவாட்டத்துடன் தங்களது ஆட்டத்தை நிறுத்தி விடுகின்றன. அதைக் கண்டு அகம் பதைத்த தலைவி, ஆண்மயில்களை நோக்கிக் கூறுகிறாள் :—

"வெறும் மேகங்களைக் கண்டுவிட்டு, வெறி பிடித்தவர்களைப்போல் கூத்தாடுகிற ஆண் மயில்களே! உங்கள் குலத் தலைமை பூண்ட இரண்டினுள் ஒன்று வெற்றி வடிவேலனைத் தாங்கி உலவினால், மற்றொன்று கலைமகளைத் தாங்கி உலவுகிறதல்லவா? நீங்கள் உங்கள் காதலிகள் கொண்ட வாட்டத்தைக் கண்டும் காணாதவர்களைப்போல், அவர்கள் படும்துயரம் மேன்மேலும் பெருகுமாறு ஆடிக்கொண்டிருப்பதேன்? உங்களைக் காதலிப்பவர்களிடம் அன்பு காட்டாத உங்களுக்கு, ஆட்டம் எதற்காக? ஒருகால், வனவேடர்கள் மறந்து வைத்துவிட்டுப் போய்விட்ட பாத்திரங்களிலிருந்த கள்ளைக் குடித்து விட்டுத்தான் இப்படி ஆடுகின்றீர்கள் போலும்! ஐயோ! பாவம்! மதுவின் மயக்கம், உங்கள் மதியையும் மயக்கிவிட்டது போலும்! சிறந்த பெருமை பெற்ற குடியில் பிறந்திருந்தும், கள்ளைக் குடித்து மகாபாதகர்களாய் விட்டீர்களே! சிச்சீ! உங்கள் எதிரில் நிற்பதும் தகாது!"

இவ்வாறு அம்மயில்களை மகாபாதகர்களாகக் கருதி வெறுத்துரைத்த தலைவி, அவ்விடத்தை விட்டு வேகமாக நடந்து செல்கிறாள். சிறிது தூரம் சென்றதும் புன்னை மரம் ஒன்றின் அடியிலே - அம்மரத்தைத் தழுவிப் படர்ந்து - காற்றில் அசைந்து ஆடிக்கொண்டிருப்பதொரு கொடியைத் தலைவி காண்கிறாள். அக்கொடியின் இடையிடையே காணப்படும் இந்திரநீல நிறமுடைய 'கருவிளை'ப் பூக்களென்னும் காக்கணம்பூக்கள், கண்ணபிரானது வண்ண மேனியை ஒத்தனவாகத் தலைவியின் அகத்திற்குத் தோன்றுகின்றன. அக்கொடி புன்னை மரத்தின் அடியைத் தழுவி நிற்பது போல், தனது ஆருயிர்க் காதலனைத் தான் தழுவி மகிழுங் காலம் எப்பொழுது வாய்க்குமோ எனும் ஏக்கம் தலைவிக்கு உண்டாகின்றது. உடனே, அவள் அக் கருவிளைப் பூக்களை நோக்கி முறையிடுகிறாள் :—

"மாதர் மனதிற்கு மகிழ்வூட்ட வேண்டிய பூக்களே! கண்ணபிரானது வண்ண மேனியைக் காட்டி எனது காதல் தீயை மேன்மேலும் வளர்க்கிற கருவிளை மலர்களே!! உங்களது மென்மலர்த் தன்மை எங்கு சென்றது? காண்போரைக் களிப்பூட்டக் கூடிய உங்களது கருணை ஒளிந்த இடமெங்கே? எனது காதலரின் பிரிவாற்றாத என்னை எரிக்கின்ற காதல் தீயோடு, நீங்களும் சேர்ந்துகொண்டு என்னை முற்றுமே எரித்துவிட எண்ணிக்கொண்டு விட்டீர்களோ? நெருங்கினால் குளிர்ந்திருப்பதும், நீங்கினால் பெரிதும் எரிப்பதுமாகிய காதல் தீயை உடையவராகிய என் மனதை அடிமை கொண்ட எனது மன்னர், அருள் பொழியும் தமது மலர்க் கரங்களால் என்னைக் கொல்ல மனமின்றி, எனது உடலை எரிக்கும் வேலையைத் தோட்டிகளாகிய உங்களிடம் ஒப்புவித்து விட்டாரோ? அவர் இட்ட கட்டளையை நிறைவேற்றுவதாக ஏற்றுக்கொண்ட கரிய 'கருவி

ளைக் கொலைஞர்களே! இதோ என் உடலை உங்களிடம் ஒப்புவிக்கிறேன்! இதை இப்பொழுதே எரித்துவிடுங்கள்! எரித்துவிடுங்கள்!! ஐயோ! என்ன இது? எனது ஆருயிர்க் காதலர் ஆர்வத்தோடு என்னை அணைத்து இன்புறவிக்கும் காலமும் என்றேனும் ஒருநாள் எனக்கு வாய்க்காமற் போகாது என்னும் எண்ணம், இன்னமும் என் மனத்தில் ஒட்டிக்கொண் டிருக்கிறதே! அப் பாழும் ஆசை ஒன்றேயல்லவா, எத்தகைய சித்திர வதைகளுக்கு உட்பட நேர்ந்தும் எனது உயிரை இவ்வுடலினின்றும் நீங்காதவாறு தடுத்து நிறுத்திக்கொண்டு விடுகின்றது! ஓ! கருவிளைக் கொலைஞர்களே! உங்களது அடிகளில் வீழ்ந்து வணங்குகின்றேன். எனது ஆசை என்றேனும் ஒருநாள் நிறைவேறக் கூடும் என்னும் நம்பிக்கை, இன்னும் என் உள்ளத்தினின்றும் ஒழிந்தபாடில்லை! அதன் பொருட்டேனும் என்மேல் கொஞ்சம் கருணை காட்டுங்கள்!" — என்று இரு விழிகளினின்றும் நீர் பெருகி வழியக் கூறி, கருவிளைக் கொடிகளின் கீழ் தலைவி வீழ்ந்து வணங்குகிறாள்.

அந்தோ! நிலத்தில் விழுந்த இடத்திலுமா அவளை வேறு சில பாதகர்கள் துன்புறுத்த வேண்டும்! வணங்கி எழுந்த தலைவியின் கண்களின் முன், தரையில் படர்ந்திருந்தவொரு கொடியில் விளங்கிய கருநிறக் களாப்பழங்கள் சில கண்ணபிரானது வண்ணத்தைக் கொண்டு காட்சி யளிக்கின்றன. அழுதுகொண்டிருந்த தலைவி, களாப்பழங்களின் போலித்தன்மை கண்டோ மனத்துயர மிகுதியாலோ அவற்றை நோக்கிக் கலகலவென்று சிரிக்கிறாள்; சிரித்துப் பின்வருமாறு பேசுகிறாள்:—

"களவிற் சிறந்த களாப்பழங்களே! உங்களது திருட்டுத்திறமைமிக்க வியப்பூட்டக்கூடியதாக இருக்கிறது! முன்பு என் காதலர் வெண்ணெய் திருடினார்; தனக்கு உரிய காதலியைக் கவர்ந்து கொண்டு விட்டார்; எனது வினைகளைக் கழற்றிவிட்டார்; என் உள்ளத்தைத் தனக்கே உரியதாகச் செய்துகொண்டு விட்டார்; என் உடல் வளத்தையும் ஒழித்துவிட்டார்; என் உயிரையும் எடுத்துக்கொண்டுவிடச் சமயம் பார்த்துக்கொண்டிருக்கிறார். அத்தகைய கள்வர் பெருமானது கருமுகில் வண்ணத்தையும் நீங்கள் திருடிக்கொண்டுவிட்டீர்கள்! எனது சிந்தைக்கினிய செல்வ மன்னரின் நீல வண்ணத்தை நீங்கள் திருடிக்கொண்டுவிட்டால், அந்நிறத்தினாலேயே நீங்கள் சிறப்புற்று விடுவீர்களோ? ஈனக் கள்வர்களே! நிறத்திற்கு ஆசைப்பட்டுப் பழங்களுக்கு உரிய சிறப்பையும் இழந்தீர்களே! பலராலும் அலட்சியமாக மிதிக்கப்படும் உங்களைப் பார்க்கவும் எனக்கு மிக்க வெட்கமாக இருக்கிறது!"

இவ்வாறு நான்காவது பாதகர்களாகத் தோன்றிய அவற்றை இகழ்ந்த தலைவி, மறு பக்கம் திரும்பிப் பார்க்கிறாள். கம்பீரமாகக் காற்றில் அசைந்தாடும் காயாம்பூக்களின் கொடிகள் சில, தம்மிடம் வருமாறு தம் கைகளை நீட்டித் தன்னைக் கூப்பிடுவதாகத் தலைவியின் மனதிற்குத் தோன்றுகிறது; உடனே எழுந்து அவற்றின் அருகில் சென்று நின்று, அவற்றை உற்று நோக்குகிறாள். கண்ணபிரானுடைய இந்திர நீல வண்ணத்தைக் கொண்டனவாய்த் தலைவியின் காதல் தீயை வளர்க்கின்ற காயாம்பூக்கள், ஐம்பெரும் பாதகங்களையும் ஐந்து மலர்க்கணைகளாகக் கொண்டு உலகத்தினரை வாட்டுகின்ற காம தேவனால் தன்னைக் கொல்வதற்காக அனுப்பப்பட்ட போர்வீரர்களைப் போன்று போர்க்கோலங் கொண்டு நிற்பனவபோல அவளது மனதிற்குத் தோன்றுகின்றன. தலைவனது பிரிவாற்றாத கொடுந்துயரம் அனுபவித்துக்கொண்டு இவ்வுலகில் வாழ்வதைவிட, இறந்து படுவது நலம் என்று தலைவி கருதுகின்றாள். ஆயினும், இன்னும் ஒரே ஒரு முறை தலைவனைக் கூடிக் களிக்கும் பேறுமட்டும் தனக்குக் கிடைத்துவிட்டால், தனது ஆவி உடலை விட்டுப் பிரியும்போது அமைதியோடும்

மகிழ்வோடும் பிரிந்து செல்லும் என்னும் எண்ணத்தினால், அவள் இன்னும் சிறிது காலம் அப்பேற்றை எதிர்பார்த்துக்கொண்டு இவ்வுலகில் தங்கியிருக்க விரும்புகின்றாள். அகத்தினின்றும் அகற்ற முடியாத அவ்வாசையினாலே, அவள் காயாம்பூக்களாகிய காமன் ஏவலரை நோக்கிப் பின் வருமாறு கூறுகின்றாள் :—

"காமதேவனால் ஏவப்பட்ட போர் வீரர்களே! தனக்குச் சமானமான வலியற்றவர்களையும் பேதை மாதர்களையும் எதிர்த்து நின்று போர் தொடுக்க, தருமவீரர்கள் மனம் இசையுமோ? உடல் வளத்தை இழந்து உள்ளச் செருக்கையும் இழந்து கொடுந்துயரால் வருந்துகின்ற என்மேல், சிறிதளவும் இரக்கமின்றிப் பகைமை கொண்டு எதிர்த்து நிற்கும் உங்கள் வீரமும் ஒரு வீரமாகுமோ? உங்களது பேடித் தன்மையைக் கண்டு, மற்ற மலர்கள் பரிகசித்துச் சிரியாவோ? இவ்வுலக வாழ்வில் கொண்டு விட்ட பாசத்தினாலே, நான் மரணத்திற்கு அஞ்சி நிற்கிறேன் என்று நினைத்துக்கொண்டு விட்டீர்களோ? சிச்சி! என்னிடமும் அந்த அற்ப மாயை நெருங்க முடியுமோ? 'துன்பங்களுக்குப் பின் இன்பம் உண்டு' என்னும் நம்பிக்கையினாலே - 'எனது உண்மைக்காதலின் உறுதி வீணாகிவிடாது' என்னும் நிச்சயத்தினாலே - 'இவ்வுடலை விட்டு என்னுயிர் பிரிவதன் முன்னர், எனது இன்னுயிர்த் தலைவர் ஒரு முறையேனும் என்னிடம் வாராரோ' என்னும் ஆசையினாலே - இன்னும் சிறிது காலம் இங்கு தங்கியிருக்க விரும்புகிறேனே யன்றி வேறில்லை. இவ்வுலகத்திலேயே - பலரும் அருகிலிருந்து பார்த்துக் கொண்டிருக்கும் போதே - இவ்வுடலோடேயே - எனது ஆருயிர்த் தலைவர் என்னைத் தமது முகில்வண்ணத் திருமேனியுடன் இரண்டறக் கலந்து கொண்டு விடத் திருவுள்ளம் கொண்டாலும் கொண்டு விடுவாரன்றோ! எனது உறுதி குன்றாத உண்மைக் காதலுக்குத் தக்க பரிசு என்றேனும் ஒரு நாளில் கிடைத்தே தீரும் என்னும் நன்னம்பிக்கை எனக்கு இருக்கும் போது, உங்களைக் கண்டு நான் ஏன் அஞ்ச வேண்டும்? உங்களுக்கும் குயில்கள் மயில்கள் கருவிளைமலர்கள் களங்கனிகள் முதலிய மற்ற மாற்பெரும் பாதகர்களுக்கும் என் மனமறிய எத்தகைய துன்பமும் செய்யாதிருந்தும், என்னைப் பெரிதும் துன்புறுத்திய கருணையற்ற கொடியவர்களாகிய உங்களை இனிச் சும்மா விட்டு விடுவேனோ? மகாபாதகர்களைத் தக்கவாறு தண்டிப்பது நீதியாகுமன்றோ! எனது ஆருயிர்த் தலைவரோடு நான் சேர்ந்து கொண்டுவிட்ட பின்னர், உங்களால் விளையும் இன்பங்களைப் பிற்காலத்து மனிதர்கள் சிறிதும் மதியாது மிக்க அலட்சியமாகப் புறக்கணித்து நடந்து கொள்ளுமாறு செய்து விடுகிறேன் பாருங்கள்! எனது கொடிய சாபத்தின் பயனாக, எதிர்காலத் தமிழ் நாட்டிலே உங்களைக் கவனிப்போர் எவருமின்றி - உங்களது செருக்கையும் இன்பப் பெருக்கையும் இழந்து - பிற்காலத்து மனிதர்களால் நீங்கள் பெரிதும் அவமதிக்கப் படுவதைக் கண்டும், மதியாதாரிடையிலிருந்து மானம் இழக்க விரும்பாமல் மனித சஞ்சாரமற்ற இடங்களிலே திருடர்களைப் போன்று நீங்கள் ஒளிந்து வாழ்வதைக் கண்டும், எனது இன்னுயிர்த் தலைவரோடு சேர்ந்துகொண்டு வைகுந்தமாநகரில் வீற்றிருக்கும்போது உங்களது இழிநிலையை எண்ணி எண்ணிச் சிரித்துக் கொண்டிருக்கப் போகின்றேன்!

காட்சி முடிந்துவிட்டது. அத் தலைவி தன்னைத் துன்புறுத்திய விசித்திர ஜாலப் பெரும்பாதகர்களது இன்றைய நிலையைக் குறித்து, தனது தலைவரோடு உல்லாஸமாக உரையாடிக் கொண்டு அடிக்கடி சிரித்துக் கொண்டிருக்கும் காட்சியையும் பார்க்க விரும்புகின்ற வாசகர்களுக்கு, இப்பொழுதே வைகுந்தத்திற்குப் புறப்படக்கூடிய வைராக்கியம் இருக்கிறதா? அத்தகைய வை

சாக்கியம் இன்னும் உங்களுக்கு உண்டாகவில்லையானால், பத்திரிகை உலகத்துக்கு வந்து சேருங்கள்! இதுவரை உங்களைச் சிந்தனை உலகில் சஞ்சரிக்கச் செய்த தலைமகள் யாரென்பதை இன்னும் உங்களுக்குத் தெரிவிக்க வில்லையே! அவ்வன்னைதான் கண்டோரைக் காதல் வெள்ளத்தில் ஆழ்த்தக் கூடிய கண்ணபிரானுக்குப் பாமாலை பாடிக்கொடுத்தும் பூமாலை சூடிக் கொடுத்தும் மகிழ்ந்திருந்து கடைசியில் அப்பெருமானோடு இரண்டறக் கலந்து இன்புற்றிருக்கும் ஸ்ரீ வில்லிபுத்தூர் ஆண்டாள்!

“பைம்பொழில் வாழ் குயில்காள்!
மயில்காள்! ஒண் கருவிளைகாள்!
வம்பக் களங்கனிகாள்!
வண்ணப் பூவை நறுமலர்காள்!
ஐம்பெரும் பாதகர்காள்!
அணி மாலிருஞ்சோலை நின்ற
எம்பெருமானுடைய நிறம்
உங்களுக்கு என் செய்வதே?”

இப்பாட்டில் புகுந்து கொண்டிருந்த விசித்திர பஞ்சமாபாதகர்களைக் கண்டு பிடித்து பகிரங்கப் படுத்துகிற வேலை, ஆராய்ச்சித் துறையில் சிறிதும் திறமை இல்லாத சிறியேனுக்குக் கிடைத்ததை நினைக்க நினைக்க எனக்கே சிரிப்பு உண்டாகிறது! ‘எனது அதிகப் பிரசங்கித்தன’த்தை வாசகர்கள் மன்னித்து விடுவார்களாக.

கீதையின் போதனை

[திரு. எ. முத்தையா, எம். எ.]

(*Lecturer, Pachaiyappa's College*)

“எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே”

கீதை இந்துமத நூல்களில் தலையாயது; இந்துமதக் கொள்கைகளைச் செவ்வனே கூறுவது; சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல் முதலிய அணிகள் செறிந்தது; தெய்வ வாக்கெனப் போற்றப்படுவது; இந்துக்களின் பைபிள் எனத்தக்க பெருமையை யுடையது; இந்துக்களையன்றி ஏனைய மதத்தினரும், மற்ற தேயத்தினருங் கூடத் தத்தம் மொழியில் மொழிபெயர்த்து, தலையாய நூலெனத் தாமும் படிக்கும் திறத்தது.

இத்தகைய நூலின் போதனை என்ன என்றாய்தல் மிக்க பயனுடைத்து. நிகழ்காலப் போக்குக் கேற்றன எவை அந்நூலில் காணக்கிடக்கின்றனவென் பதை ஆராயின் அநேக விஷயங்கள் புலனாகின்றன,

உலகில் பற்பல தேயத்தினரும், பல வேறு வகைப்பட்ட காலத்திலும், பல் கோடி உயிர்களும் எங்ஙனம் நலனுற்று செம்மையின் வாழமுடியும் என்பதைப் பற்றிப் பெரிதும் ஆராய்ந்து வந்திருக்கின்றனர். இவ்வுலகில் வாழ்க்கைமுறைகளைச் செவ்வனே அமைப்பின் இவ்வுலகையே பெரிய இன்ப வீடாக்கலாம் என்றெண்ணுவோர் ஒரு சாரார்: “இன்பத்தை இவ்வுலகில் துய்த்தலரிது உலகத்தை நீத்தலே உறுதியடையும்நெறி” என்பாரொரு சிலர்; பொருளாதார நிலையை அமைக்கும் முறையில் தான் இன்பதுன்ப வேறுபாடுகளுண்டாகின்றன என உலகறியக் கூறுவோர் ஒரு கூட்டத்தார். மேல் நாடுகளில் சில காலமாக உலகினர் எல்லாரும் இன்புற்றிருக்கத்தக்க ஏற்பாடுகள் செய்யமுடியும் என்ற தீர்மானத்துடன் Communism, State socialism முதலிய பல வேறுபட்ட பொருளாதார ஏற்பாடுகளையுடைய அரசியல் முறைகளை ரஷ்யா

முதலிய பலவேறு நாடுகளிலும் புகுத்தி வருகின்றனர்.

உலகின் அறிவுப்போக்கு இவ்வண்ணமிருப்ப, நம் நாட்டினர் எல்லாரும் இன்புற்றிருக்க வேண்டியதற்கேற்ற ஏற்பாடு எது என்று கூறியுள்ளனரென ஆராயின் "சகல மக்களின் சந்தோஷம்" என்னும் அஸ்திவாரத்தின் மேற் கட்டப்பட்ட கலங்கரை விளக்கம் கீதைதானென்பது எளிதில் தெரிகிறது. சம்சார சாகரமாகிய கடலில் கரைகாணாது தவிக்கும் கப்பல்கள் பல. அவையே பலகோடி உயிர்களும். அவ்வுயிர்களாகிய கப்பல்களைத் தம்மிட மழைத்து, கடவுளாகிய துறைமுகத்தில் கலக்கமற்றிருக்க உதவுவது கீதைக் கலங்கரை விளக்கமே. கடவுளாகிய துறைமுகத்தில் உயிர்களை வருத்தும் துக்க அலைகள் கிடையவே கிடையா. அங்கே கடவுளின் கருணையாம் இளந் தென்றல் கழிபேருவகையை அளிக்கிறது.

நவீன அறிவுப் போக்கின்படி பொருள் இன்பம் என்னுமிரண்டினும் சமத்துவத்தாண்டவம் வேண்டுமென முயற்சி செய்வதில் ஏற்படும் இன்னல்கள் பற்பல. ஒரோவழி எல்லா மக்களிடையேயும் பொருளில் சமத்துவ மேற்படுத்தினும் இன்ப நுகர்ச்சியில் சமத்துவ மேற்படுத்துவது அரிதினுமரிய காரியமாகும். வெளிப் பொருள்களை நுகர்வதில் சமத்துவ மேற்படின் உயிரின் இன்ப உணர்வும் சமமாகுமெனக் கூறல் முற்றும் சரியல்ல.

மிகப் பெரும் முயற்சி செய்து, பலவேறு கஷ்டங்களிடையே நிறுவப்படும் "இன்ப சமூகங்கள் இவ்வுலகில் நிலையற்றவையாகின்றன."* †அருமைப் பொருள்கள் அழிகின்றன. ஐம்புல நுகர்ச்சியால் அடையும் பலன்கள் அழியும் தன்மையவான புறப்பொருள்களிடமிருந்தே பிணிமூப்புச் சாக்காடாகிய மாளா வருத்தப் பெருந்தீ மக்களை வாட்டுகின்றது. ஒரு பகுப்பினர் இன்புறின் மற்றப் பகுப்பினர் துன்புறுகின்றனர். உலகப் போர் என்னும் வெடிகுண்டு உச்சிக்குமேல் தொங்குகிறது.

இந்த உலகமானது தோன்றி நின்று அழியும் இயல்புடையது. இவ்வுலகிலுள்ள பொருள்களெல்லாம் நிலையற்றவை. இதை உணராது உலக இன்பத்தைத் தேடித்திரிந்து எய்தல் அறிவற்ற செயல். அது கானல்நீரை வானீரென மான் தேடுதலை யொக்கும். இவ்வுலகில் எத்துணை முயற்சிசெயினும் பெறக் கூடியது சிற்றின்பமே. சாயாரூபமான இவ்வவனியில் நுகரக் கூடிய இன்பம் எங்ஙனம் பெருமையுடைத்தாகும்? மக்களிடையே இவ்வுலகின்கண்ணே இன்பசமூகம் ஏற்படுத்த வேண்டுமென முயலுதல் பயனற்றது. உடல் நலத்தையே உறுதிசெய்ய முன்வருவது இம்முயற்சி. ஐம்புலன்களால் ஒரோவழி அனுபவிக்கும் இன்பத்தை ஒரு சிறிதுதான் கொண்டது இன்னற்பொதி. ஆதலால் பேரின்பப் பெருவீடடைதல் எவ்வாறு எனக் கூறுவது தான் கீதையென்னும் சீர்த்திக் கிரந்தம். உயிர் உடல் என்னும் இரண்டில் பின்னதின் இன்பத்தை இலக்காகக் கொண்டனர் மேல் நாட்டு மேதாவிகள். நம் நாட்டினரோ உயிரின் நலனை நாடற்பாற்றென நாளும் தேடினர். அம்முயற்சியின் பயனே கீதை. கீதை கூறும் "இன்ப சமூகம்" இன்பமயமான உயிர்களால், பற்றற்றுக் கட்டறுபட்ட உயிர்களால் ஆக்கப்பட்டது.

அவ்வின்ப சமூகத்தில் இன்னல் கிடையவே கிடையாது. எல்லா உயிரும் ஒன்றே என்ற உணர்வு ஓங்கி நிற்கின்றது. *"ஆன்மா எல்லாவற்றிலும் உளது. எல்லாம் ஆத்மாவில் உண்டு" என்று உணர்வாரே அச்சமூக உறுப்பினர். வாழ்க்கையோ கடவுள் மயமான சபாவ வாழ்க்கை.† ஞானமே உணவு. எல்லா உயிர்களும் அஞ்ஞான இருளை விட்டுக் கடவுளின் பேரொளியை அறு

---

* Chap. II 13, 14.
† Chap 16—8.

* Chap. 6—29.
† Chap. 18—21. Chap. 4—10.

பவிக்கின்றன. இருவினை ஒப்பு உண்டாகிறது. புண்ணிய பாவம் அவர்களைக் கட்டுப்படுத்துவதில்லை. சாதாரண நீதிநெறிகள் அவர்களை வசப்படுத்த முடியாது. கர்மபந்தம் கழன்று விடுகிறது. துன்ப உணர்ச்சியும் அவர்கட்குக் கிடையாது. *துன்ப காரணர்களாகவும் அவர்கள் இருப்பதில்லை. எல்லோரையும் சமத்துவ புத்தியுடன் நோக்குபவர்கள் அவர்களே; எனை உயிர்களும் உய்ய வேண்டுமென உழைப்பவர்களும் அவர்களே. சாதிப்பிணக்குகள் அங்கு கிடையா. சமயப் பிணிகள் அவர்களை அணுகா. ஆத்மதரிசனம் அவர்கட்குச் சித்திக்கின்றது.

கீதையின் இன்பசமூக அங்கத்தினர் அடையும் ஆனந்தமோ அளவற்றது. உன்மத்தன் கனவு கண்டால் உணர்வின் மாத்திரமிருக்குமே யன்றி உரைக்க முடியாத வாறுபோல, அனுபவித்தாரே அதன் பெருமையை அறிய முடியும். அவர்களெல்லோரும் அளப்பில் புகழ் வாய்ந்தவர்கள். இன்பம் அவர்களுடைய சொந்த ஆஸ்தியாக இருக்கின்றது. மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் ஐம்புலன்களாலும் மகனிடத்தே சிற்றின்பம் நுகருகின்றிலர். பேரானந்தப் பெருங் கடலிடையே ஐம்புலன்களாகிய பாத்திரங்களால் இன்பத்தை முகந்து உண்டு செம்மாந்திருப்பர். "நாமார்க்கும் குடியல்லோம்" என்பது அவர்கள் வீரமொழி. கடவுளின் பகுப்பின் ஒரு கூறே ஒவ்வொரு உயிரும் என உணர்வார் அப்பெரியார். இந்த நிலையில் அவர்கள் பூரண சுயேச்சையை அடைந்தவர்களாக ஆகின்றனர். ஏனெனில் முற்கூறியபடி எக்கருமஞ் செய்தாலும், எதவத்தைப் பட்டாலும் அவைகளின் பலனை சுக துக்கங்கட்கு அப்பாற் பட்டவர்களாக அவர்கள் விளங்குகின்றார்கள். தற்போதம் இழந்த பெரியார்கள் அவர்கள். அழியாப் பெரும் வஸ்துவான கடவுளிடமிருந்து தான் அவர்கள் இன்பமெல்லாம் அடைகின்றனர். அழியும் பொருள்களான உலகப் பொருள்களில் அவர்கள் மனம் ஈடுபடாததால் அவர்கள் துன்ப நுகருவதில்லை; இலவற்றை உளவெனக் கொண்டு மயங்குவதில்லை. எல்லா இன்பத்தையும் நுகருவது உயிரே. உள நெகிழ்ச்சி தரும் இவ்வின்பம் சாலச் சிறந்தது; அளவற்றது; அழியாதது. அகப்பொருளின்பத்தின் அளவு கடந்த நிலையே, அவ்வுயிர்கள் பெறும் பேருகும்.

இப்படிப்பட்ட இன்ப சமூகம் மேல் நாட்டாரின் இன்ப சமூகத்தை விட எவ்வளவோ சிறந்தது என்பது முற்போந்த ஆராய்ச்சியால் தெள்ளென அறியலாகும். அவ்வின்ப சமூக அங்கத்தினராக வேண்டின் கீழ்க் கண்ட மூன்று வழிகளில் ஒன்று தானும் சாலும். அவைதாம்,

(1) ஞான மார்க்கம். (2) பக்தி மார்க்கம். (3) கர்ம மார்க்கம்.

1. ஞான மார்க்கம்

பொருள்களைத் துருவி ஆராயும் வழியில் அறிவைச் செலுத்தினால் பொருள்களின் தன்மை முதலியவற்றை அறியலாம். புறப்பொருள்களிலும் நிலையற்ற பொருள்களிலும் ஆராய்ச்சி நிகழ்த்திப் பெறும் அறிவு விஞ்ஞானமாகும். (Scientific knowledge) உண்மையின் கூறுகளை முழு உண்மையென மயங்குவது தவறு.* ஆத்மதரிசனம் கடவுள் தரிசனம் முதலியன செய்வதற்கு உயிரின் போக்கைப் பெரும் பாலும் மாற்ற வேண்டி வருகிறது. அர்ஜுனன் புறக்கண்ணால் கண்ணனின் விஸ்வரூபத்தைக் காணவில்லை. அறிவாம் அகக் கண் திறந்த அப்போது தான் அனைத்தையும் பார்க்க முடியும்.† காமக் குரோதாதிகளை அடக்கல் வேண்டும்.‡ அறிவுக்குப் பயிற்சி நன்கு கொடுக்க வேண்டும். உலகப் பழக்க வழக்கங்களை மெல்

* Chap 12—15.

* Chap. 18—20 to 22.

† Chap. 4—39.

‡ Chap. 2—44.

லாம் ஞானக் கண் கொண்டு பார்க்க வேண்டும்.

மனதுக்குப் பயிற்சி உண்டாவதற்காகவே யோகம் செய்ய வேண்டி இருக்கிறது. அதனால் மனம் சுத்தியடைகிறது. உடல் உணர்வெல்லாம் தூயனவாகிக் கடவுளுக்கு வாசயோக்யமான வீடாகின்றன. உலகின் பலவேறு வகைப்பட்ட இன்பப்பொருள்களிடமும் செல்லாதவாறு மனதைத் தடுப்பது யோகம். உண்மைப் பொருளை உணர வழி காட்டுவதும் அதுவே.

உண்மையின் தரிசனம் பெற மன நிம்மதிவேண்டும். உண்மையை ஒருவன் பெறின் எக்காளும் இன்பமே. வாழ்க்கையின் நலன் கடவுளின் கலியாண குணங்களில் ஆழ்தலல்லால் வேறல்ல. உண்மையை அறிய வேண்டுமெனின் கடவுளின் அடியில் நம் இதய கமலத்தைச் சாத்தி வழிபட வேண்டும்.*

உண்மையை அறியின் எல்லா உயிர்களும் முடிவில் ஒன்றே என்ற உணர்வு உண்டாகின்றது. ஒரே இடத்தில் தோன்றி, ஒரே இடத்தில் அடங்குவன பலகோடி உயிர்களும் என்ற அறிவு விளக்க முண்டாகின்றது. குறுகிய நோக்கக் கொள்கைகள் வலியிழக்கின்றன. உண்மை யுணர்ச்சி உண்டானதும் புலன்கள் அழிகின்றன. "தான்" "தனது" என்ற அகங்கார மமகாரங்கள் அழிகின்றன.† எஞ்சி நிற்பது உயிர் அநுபவிக்க வேண்டிய அளப்பரும் இன்பந்தான்.

2. பக்தி மார்க்கம்

ஒருவஸ்துவின் மேல் உண்டாகும் உளநெகிழ்ச்சியைப் பலர் பல பெயராலழைப்பர். தனக்குக் கீழ்ப்பட்டாரிடத்தில் காட்டின் கருணை எனவும், சமப்பட்டாரிடத்தில் காட்டின் அன்பு எனவும், கடவுளிடங் காட்டின் பக்தி எனவுங்கூறுப. கடவுளிடம் பக்தி யுற்றார் மற்ற எல்லா வற்றையும் மறப்பர். அளவுகடந்த ஆர்வமே பக்தி. அப்பக்தி பயத்தினால் உண்டாவதல்ல. கடவுள் கருணை மயம். தீனதயாளு. ஒருயிர் கடவுளிடமே எல்லாவற்றையும் அர்ப்பணம் செய்யின் உறுதி எய்து மென்பதில் ஐயமுண்டோ? கீதையில்* "என்னிடம் மனதை நிலை நிறுத்து; என்னுள் உன் உணர்வைப்புகுத்து; அதன்பின் என்னுடனேயே இருப்பாய்" என்று கூறப்பட்டு இருக்கிறது. அதுவே பக்தி மார்க்கத்தின் சக்தியாகும்.

பக்தி மார்க்கத்தில் ஈடுபட்டாருக்குத் தனக்கென வேறொன்று கிடையாது.† நினைப்பது, பூசிப்பது, போஷிப்பது எல்லாம் அப்பராபர வஸ்துவையே. தற்போதம்போய் கடவுட்போதம் வந்தடைகின்றது. அப்போது எக்காரியம் செய்யினும் அதன் பலன் அவர்களை வாதிக்காது. அப்பக்தி மார்க்கத்தினர் கடவுளையே சிந்திக்கின்றனர். உயிரின் உணர்வு அதிகரிக்கின்றது. ஆத்ம திருப்தி பெருகுகின்றது.‡

பலவேறு வகைப்பட்ட கடவுளின் முகூர்த்தங்களும் ஒரே கடவுளையே குறிக்கின்றன. §"யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வமாகி ஆங்கே" அக்கடவுளே வந்து தோன்றுவன். பலவேறு உருவங்களும், வழிபடுவோரின் அறிவு பக்தி இவைகளின் பக்குவத்தைக் காட்டும் அறிகுறிகளாக விளங்குகின்றன.

¶எல்லா வஸ்துகட்கும் அப்பாற்பட்டது கடவுள் எனக் கீதை கூறுகிறது. அதுவே பிரபஞ்ச சொரூபன் கடவுள் எனவும் கூறுகிறது.

எனவே, பக்திமான் தான் என்ற தன்மையை இழக்கின்றான். செய்வன எல்லாம் கடவுளுக்குத்தான். எனின் இன்ப நுகர்ச்சிக்கு அளவு முண்டோ?

* Chap. X 8 & 9.
† Chap. II—59.

* Chap. 12—8.
† Chap IX—28.
‡ Chap XVIII—64 to 66.
§ Chap. VII 20—21.
¶ Chap. XVIII 73 also VI & XI.

3. கர்ம மார்க்கம்

நற்காரியம் உயிருக்கு உறுதி பயக்கும். நல்ல மனிதன் உலகத்துடன் கூடி உலக நலனுக்கு உழைக்க வேண்டும்.*

நல்ல மனிதனுக்குத் தன்னை யடக்கும் தன்மை உண்டாகிறது. எக்காரியம் செய்தாலும் நற்பயனே அன்றோ என வருந்தற்க வெனக் கீதை கூறுகின்றது.† எக்காரியமும் செய்யாமல் இருப்பதைவிட, காரியஞ் செய்து எக்காரியத்திலும் பற்றற்று நிற்றல் நன்று. நற்கிருத்தியங்களில் செல்லும் ஆசை மிகச் சிறந்ததாகும்.‡ ஆதலால் ஆசை என்பது முற்றிலும் கெட்டதல்ல. மோக்ஷத்துக்காக நாம் முயன்று, முயற்சி பயனுற்ற நிலையை அடைதல் வேண்டும்.

அந்த நிலையில் உயிர்கட்கு இதஞ் செய்ய முயலுதல் முக்கியம். கீதை சுயநல ஆசையை ஒழிக்க வேண்டுமெனக் கூறுகிறதே யொழிய உலகின் சாதாரண காரியங்களை விட்டொழித்து விட வேண்டுமெனக் கூறவில்லை.

எந்த நல்ல காரியத்தையும் தனக்கெனச் செய்யலாகாது. நிற்பினும் கிடப்பினும், கடவுளது அச்செய்கை என உணரவேண்டும். அந்த நிலையில் அளவிலின்பம் துய்க்கச் செளகரியம் உண்டாகின்றது.

எனவே, இதுகாறும் கூறிய கீதையின் இன்ப சமூகம் அளப்பரும் பெருமையுடையது; இன்பமானது; இளமையானது; இன்னலில்லது; அழிவில்லது; ஒழிவில்லது. அச்சமூகத்தின் முடியாப் பெரும் இன்பமே இன்பம் என அறிந்தாம்.

அப்படிப்பட்ட சமூகத்தைச் சேர வேண்டுமென விரும்புவார் முதலில் "நிலையற்ற உலக சமூகவின்பம்' குறைபாடுடையதென உணரவேண்டும். கீதையின் இன்ப சமூகமே எந்நாளும் மேலானதென உறுதியுடன் கடைப்பிடித்து நிற்றல்வேண்டும். அவ்வுறுதி பெற்றதும், மேற்கூறிய (1) ஞானமார்க்கம் (2) பக்தி மார்க்கம் (3) கர்மமார்க்கம் என்ற மூன்று வழியில் எவ்வழியை அநுசரித்தேனும் அவ்வளவிலின்பப் பெருவானில் செம்மாந்து மகிழ்ந்து திரியலாம்.

எனவே, இவ்வுலகில் பெருஞ் சுகம் பெற முயலுவது வீண், உண்மையின்பம் இன்னது, இத்தன்மையது, இப்படிப் பெறுவது என்னும் இவ்விஷயங்களைப் போதிப்பதே கீதையாகும்.

* Chap V 25 Chap. XII 4.
† Chap. VI 46. VIII 27.
‡ Chap. VII 11.

சுந்தர சுலோசனை

[திரு. தி. ர. சாரங்கபாணி, எம். ஏ.]

(தொடர்ச்சி)

"அப்பா சண்முகம்! நிலையில்லா உலகினர், தானெனும் ஆணவக் கேணியிலாழ்ந்து, பிறப் பிறப்பெனும் கொடுஞ் சாகரத்தில் சுழன்று சுழன்று அல்லலுறூஉம் பேதை மக்கள், அறியாமையில் அழுந்தித் தம்மையுணருந் திறனற்று மயங்கிய சிற்றறிவுக்குத் தன்னையுணர அவயவங்களையும் உருவ வகுப்பையுமீந்த இறைவனருளை யோருந் திறனற்ற புல்லியர்கள், நான் எனது எனுந் தொடர்புகளை விட்டு இயற்கையில் இறைவனெழிலைக்கண்டுருகிப் பேரின்பமெய்திடக் கனவிலுங் கருதாக் கல்லாக் கயவர்கள், பக்திநிலையின் மாண்பையும் கருமநெறியின் இயல்பையும், நீ இதுகாலை எய்தியுள்ள ஞான நிலையின் தூய்மையையும் உணரும் ஆற்றலற்ற அறிவிலிகள், உன்னை, என் மெய்ச்சீடனாகிய ஈடெடுப்பற்ற உன்னை, கள்ளனென்றுங் குடியனென்றும், வேசியருறவுடையா

னெனவும், கடன் வாங்குங் கயவனென்றும் பழித்தலான், நீ அப்புன் மொழிகளை எண்ணி எண்ணி ஏங்குதல் அறியாமையே யாகும்.”

“சுவாமி அவர்களுடைய பழிமொழிகளுக்கு யான் சிறிதும் வருந்துகின்றேன் அல்லை. ஆனால் இன்னமும் என் அகத்தைக் கொண்ட ஆண்டவன் தன்னுருவை எனக்குக் காட்டா தொளிப்பதே எனக்குப் பெரும் ஏக்கத்தை யளிக்கின்றது. ஆ! முருகா!”

“அப்பா வருந்தாதே. நின்னைக் கண்ணுறுந்தோறுங் கண்ணுறுந்தோறும் என் மனமும் மாறுகின்றது. சரீர சம்பந்தமாக நிகழும் இழிய நிகழ்ச்சிகளும் என்னை விட்டகன்று எனக்குள் ஓர் இன்ப உணர்ச்சி நிகழ்கின்றது. மெச்சினேன் உன் மெய்ப்பக்தியின் மாண்பை. யான் என்னுடைய தனிப் பூசைக்குச் செல்லல் வேண்டும். நின் பாடலைக் கேட்டு மனமுருகி உன்னைத் தேற்றவே போகும்வழியில் ஈண்டுவந்தேன். சண்முகம்! நீசிறிதுங்கவலையுறாதே. உலகம் புகழும் பெரும்பேறிறப்தும் காலம் நின்னையணுகி விட்டது. நான் சென்று வருகிறேன்.”

“சுவாமிகளே அவ்வாறே செய்யுங்கள்” என்று சுவாமிகளை அனுப்பிவிட்டுச் சண்முகசுந்தரம் ஆழ்ந்த சிந்தனையிலாழ்ந்தான்.

இதழ் 9.

தயாநந்தலால் யார்?

உரிமையுறையுளில் காவலாளனாக இருந்து தன் செயலைக் கவனித்து, உரிமையுறையுள் சாலை 60-வது எண்ணுள்ள இல்லத்தில் இருந்த “சுவாமி” என்றழைக்கப்பட்ட ஒருவருக்கு, அவைகளை இயம்பிய முருகேசனுடைய செயல் ஜயகுமாரனுக்குப் பெரும் ஆச்சரியத்தையே அளித்ததென முன்னமேயே கூறினோம். சென்னையை யடைந்த இரவெல்லாம் ஜயகுமாரன் தன் அறையில் சாய்வுநாற்காலியி லமர்ந்து ஆழ்ந்த சிந்தனையி லிருந்தான். தயாநந்தலால் யாரென்ற வினா பன்முறை அவன் அகத்திலெழுந்தது. “சாரதா! அண்ணா ஒரு மோசக்காரனிடம் மாட்டிக்கொண்டிருக்கிறார். காவியைத் தாங்கி உலகை ஏமாற்றித் திரியும் அப்பாதகனை - ஆ! சாரதா! கொலை செய்திடினும் பாவமாகாது. நாளைக்குப் பத்தாயிரம் ரூபாயை யான் அச்சண்டாளனுக் களித்திடின், அண்ணாவை மீண்டும் மீட்டுவிடலாகும்” என்று மோகனசுந்தரம் சாரதாவினிடம் இயம்பிய மொழிகள் அவனுடைய அகத்தெழுந்தன. மோகனசுந்தரத்தைக் கள்வனாக்கியவனும், சண்முகசுந்தரத்தைக் கடனாளியாக்கி வீட்டைத் துறந்து ஓடுமாறு செய்தவனும், யார் என்று ஜயகுமாரன் தான் கண்டுபிடித்தல் வேண்டும் எனக் கருதினான். இடையில் தயாநந்தலால் முருகேசனைக் கொண்டு தன்னுடைய செயல்களையெல்லாங் கவனித்துவரக் காரணமிருத்தல் வேண்டுமென அவன் எண்ணினான். தயாநந்தலாலுக்கும், மோகனசுந்தரத்தால் இழித்துரைக்கப்பட்ட காவியணிந்த கபடதாரிக்கும் சம்பந்தமுண்டென்று எண்ணினான். சத்தியநாதன் கூறியதற்கிணங்க சென்ற இரவு உரிமையுறையுள் சாலை 60-வது எண்ணுள்ள இல்லத்திலிருந்து சென்னை நோக்கிச்சென்ற 6266-வது எண்ணுள்ள மோட்டார் வண்டி யாருடையதெனக் கண்டறிதல்வேண்டும் என்று ஜயகுமாரன் திடங்கொண்டான். இவ்வாறு எண்ணிக்கொண்டிருக்கையில் “சென்னையில் தயாநந்தலால் என்னும் பெரிய மார்வாடியிடத்தில் அவருடைய நற்சாக்ஷிப் பத்திரத்தைக் கண்டே நான் அவனை இங்குஅமர்த்திக்கொண்டேன்” என்று முருகேசனைப்பற்றி சந்திரசேகரப்பிரபு இயம்பிய மொழிகள் ஜயகுமாரனுக்குப் பெருஞ் சந்தேகத்தை யளித்தன. தயாநந்தலால் என்னும் பெயரையுடைய பெரிய மார்வாடியைப் பற்றித் தான் அதுகாறுங் கேள்விப்படாதிருந்ததே அதற்கு முக்கியகாரண

மாகும். மேலும் மார்வாடிகளுள் லால் என்னும் பட்டம் கிடையாதாதலான் அவன் ஒரு மார்வாடியாக இருக்க வியலாதென்றும் அவன் எண்ணினன். அடுத்தநாள் தான் எவ்வகையாலும் தயாநந்தலாலின் உறைவிடத்தைக் கண்டுபிடித்தல் வேண்டுமென்றும், சத்தியநாதன் தம்புசெட்டி வீதி, 2220 எண்ணுள்ள இல்லத்தைக்கவனிக்கவேண்டுமென்றும் தீர்மானித்து "சத்தியநாத!" என்று விளித்தான்.

"ஐயா"

"நாளைக்குக் காலையில் நீ தம்பு செட்டி வீதியில் 2220 எண்ணுள்ள இல்லத்தைக் கவனித்து அவ்வில்லத்தில் உறைபவர்களைப்பற்றி விசாரித்துக்கொண்டு இங்குவா"

"அப்படியே யாகட்டும் ஐயா."

"சத்தியநாத! நீ மாறு வேடம் பூண்டே அங்குச் செல்லல் நன்று. மேலும், நாம் நம்விரோதியர்களைக் கவனிப்பது போலும் அவர்களும் நம்மை கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகையால் நீ ஜாக்கிரதையாக அவர்களை ஏமாற்றிச் செல்லல்வேண்டும்."

"அதற்காக நீர் கவலைப்பட வேண்டாம். இப்பொழுதே நான் செல்கிறேன். ஆனால் மீண்டும் நான் உம்மை எப்பொழுது காண்பது?"

"மாலை மூன்று மணிக்கு நீஇங்குவா. அதற்குள் நான் திரும்பி வந்துவிடுவேன். சென்றுவா."

"சத்தியநாதன் சென்றதும் ஜயகுமாரன் நாற்காலியை விட்டெழுந்து ஓர் அறையுள் சென்றான். சுமார் அரை மணி நேரங்கழித்து ஓர் அழகிய உருவம் அறையுள்ளிருந்து வெளிப் போந்தது. அவ்வுருவம் ஆங்கில முறையில் ஆடையணிந்திருந்தது. அழகிய அரை மீசையுடன் அதன்முகம் பொலிந்தது. தற்கால நாகரிகத் தடபுடலுக்கிணங்க பெரிய மூக்குக் கண்ணாடி அதன்முகத்திற்கு எழிலையளித்தது. கரத்தில் ஓர் அழகிய டெல்லி பிரம்பு விளங்கியது.

அறையினின்றும் வெளிப்போந்த உருவம் மாடியை விட்டுக் கீழேஇறங்கி மோட்டார் வண்டியிருந்த இடத்தை யண்மியது. ஆங்கு 5555 எண்ணுள்ள பெரிய வண்டி ஒருபுறமும், 3246 எண்ணுள்ள மற்றொரு சிறுவண்டி மற்றொரு மூலையிலுங் கிடந்தது. அவ்வுருவம் 3246 எண்ணுள்ள வண்டியிலேறிக் கொண்டு இல்லத்தை விட்டு வெளிச்சென்றது.

சுமார் அரை மணிநேரங் கழித்து தம்புச்செட்டி வீதியின் வழியாக மேலோதிய எண்ணுள்ள வண்டி சென்றது. அவ்வீதியில் 2220 எண்ணுள்ள இல்லத்திற் கெதிரில் ஒரு பிச்சைக்காரன் உட்கார்ந்து கொண்டு அவ்வில்லத்தைக் கவனித்துக்கொண்டிருந்தான். மோட்டாரைக் கண்டதும் அப்பிச்சைக்காரனின் முகம்மலர்ந்தது. வண்டியுள்ளிருந்த உருவம் அதைக் கவனியாதது போலும் நேராகச் சென்றது. ஆனால் அதனுடைய கண்கள் குறிப்பிட்ட இல்லத்தின் மீது பாய்ந்தன. உடனே ஒரு பெரிய சப்தம் மோட்டாரிலிருந்தெழுந்தது. ஓடிநின்ற வண்டி அவ்வில்லத்துக்கு நேராக நின்றது. உள்ளிருந்த உருவம் வண்டியை விட்டுக் கீழிறங்கிப் பிச்சைக்காரன் இருந்த பக்கமாக வண்டியின் முன்பாக மூடியைத்திறந்து வண்டியின் இயந்திரத்தைக் கவனிப்பது போலும் இல்லத்தைக் கவனித்தது.

சச்சிதாநந்த சுவாமிகள் மடம் என்ற எழுத்துக்களை அவ்வில்லத்தின் மேற் கண்டதும் திடுக்கிட்டது. "காவியணிந்த பாதகன்" என்று மோகனசுந்தரம் சாரதாவினிடம் இயம்பிய மொழிகள் அதனுடைய நினைவுக்கு வந்தன. (இவ்வுருவம் மறுவேடம் பூண்ட ஜயகுமாரனே யாகுமென அன்பர்கள் ஊகித்திருப்பார்கள்.) அக்கட்டடம் புதிய கட்டடமாகவே இருந்தது. நூற்றுக்கணக்காக ஏழைமக்கள், வறுமைப் பிணியால் வாடிவதங்கும் ஏழைமக்கள் கும்பல் கும்பலாக அம்மடத்தை நோக்கிவந்து கொண்டிருந்தார்கள். மோட்டார்வண்டி

நிற்பதையும்-ஜயகுமாரன், மாறுவேடம் பூண்ட ஜயகுமாரன் - வண்டியின் முன் மூடியைத் திறந்து கொண்டு இயந்திரத்தை நோண்டிக்கொண்டிருப்பதையுங் கண்ட ஏழைமக்களின் கூட்டம் நம் நாட்டு மௌடீக வழக்கத்திற் கேற்ப வண்டியைச் சூழ்ந்துகொண்டு ஜயகுமாரனைக் கவனித்தன. அதே தருந்தசமயமென ஜயகுமாரன் அம்மடத்தைப் பற்றி விசாரிக்க ஆரம்பித்தான். அதுகாலை அவ்வில்லத்திற் கெதிரில்அமர்ந்து இல்லத்தைக்கவனித்து நின்ற பிச்சைக்காரனும் ஜயகுமாரன் அருகில் வந்து நின்றான்.

"இந்த மடம் எத்தனை நாட்களாக இங்கிருக்கின்றது" என்று ஜயகுமாரன் இயந்திரத்தை நோண்டிக் கொண்டே வினவினான்.

ஆங்கில ஆடையணிந்து அழகாயிலங்கிய ஜயகுமாரன் தமிழில் பேசுவதைக் கேட்டதும் ஏழைகட்கு ஆச்சரியமும் ஆநந்தமும் ஒருங்கே எழுந்து அவன் கேட்ட வினாக்களுக்கு உத்தரவளிக்க முன் வந்தனர்.

"ஒரு மாசமாக இருக்குது சாமி"

"ஒவ்வொருநாளும் உங்களுக்கு இங்கு அன்னமளிக்கப் படுகின்றதோ?"

"ஆமா சாமி"

"இதற்கு யார் பெரியவா?"

"ஒரு சாமியார்சாமி ரொம்ப நல்லவரு; எங்ககூடவே அவரும் உட்காந்து சாப்பிடுராரு; ஒரு தவப்பனைபோலே இருக்குராரு. அவருக்குச் சாமி ரொம்ப ஆயுசு கொடுக்கனும். புண்ணியவானு சாமி"

அது சமயம் இல்லத்துள்ளிருந்து ஒருவன் தன்னுடைய வண்டியை நோக்கி வருதலை ஜயகுமாரன் கவனித்தான். அதேசமயம் அவனருகில் நின்றிருந்த பிச்சைக்காரன் மெதுவாக "நடராஜன்" என்றான். அதனைச் செவியுற்றதும் ஜயகுமாரன் வண்டியின் மூடியை மூடித்தாளிட்டு வண்டியுள் ஏறினான். சிறிது நேரத்தில் வண்டியும் நகர்ந்தது.

தன்னருகில் "நடராஜன்" எனமொழிந்தவன் இல்லத்தைக் கவனித்துக்கொண்டு எதிரில்லத்தில் அமர்ந்திருந்த பிச்சைக்காரனென்று ஜயகுமாரன் உணர்வான். அப்பிச்சைக்காரனை ஜயகுமாரனுடைய உண்மைப் பணியாளனாகிய சத்தியநாதனென அன்பர்கள் ஊகித்தறிந்திருப்பீர்கள். அவ்வில்லத்தைக்கவனியுமாறு ஜயகுமாரன்கூறியவுடன் பிச்சைக்காரனுடைய வேடம் பூண்டு சத்தியநாதன் சத்சிதானந்த சுவாமிகளின் மடத்தைக் கவனித்துக் கொண்டிருந்தான். சத்தியநாதன் இயம்பிய பெயர் ஜயகுமாரனுக்குப் பெருஞ் சந்தேகத்தை விளைவித்தது. உரிமையுறையுளில் காவலனாக தயாநந்தலாலால் ஏவப்பட்ட முருகேசன் தான் காருருதாங்கி மோகனசுந்தரத்தின் அறையுள் கடிதங்களைக் கொண்டவனென்று இரகசியமாகப் பேசிய ஆளின் பெயரும் நடராஜனெனச் சத்தியநாதன் தன்னிடத்தில் இயம்பிய மொழிகளை ஜயகுமாரன் மறந்தானல்லை. ஆனால் நடராஜனென் இல்லத்திலிருந்து வெளிப்போந்த ஆளை சத்தியநாதன் அறிந்து கொண்டது ஜயகுமாரனுக்குச் சிறிது ஆச்சரியத்தையே யளித்தது. எனினும் பின்னர் அதனைப் பற்றி யோசித்துக் கொள்வோமென ஜயகுமாரன் கமிஷனர் ஆபிசுக்குச்சென்று, 6266என்னுமுள்ள மோட்டார் வண்டியாருடையதென விசாரிக்க, அது 2221 தம்புசெட்டி வீதியில் வதியும் தயாநந்தலால் என்னும் பெரிய மார்வாடியின் வண்டியெனவும், சுமார் மூன்று மாதங்களுக்கு முன்னேயே அவர் அந்தவண்டியை வாங்கினார் எனவும் அறிந்தான்.

அறிந்தவுடன் நேராகத் தனதில்லஞ் சென்று தான் பூண்ட வேடங்களைந்து வேறோர் வேடம் பூண்டு தன்னுடைய வண்டியில்செல்லல் நன்றன்றென ஒரு நண்பருடைய வண்டியிலேறித் தம்புசெட்டி வீதியில் 2221ம் என்னுமுள்ள இல்லத்தை யடைந்தான். அடுத்த இல்லமாகிய சுவாமிகள் மடத்தின் முன் ஏழை மக்கள் நிறைந்திருந்தனர். பி-

சைக்காரன் வேடங்கொண் டங்கிருந்த சத்திய நாதனையும் ஜயகுமாரன் காண வில்லை யாதலான் அவன் மடத்திற்குள் சென்றிருப்பான் எனத் தேர்ந்து 2221 எண்ணுள்ள இல்லத்தை நோக்கினான். அதில் தயாநந்தலால் மார்வாடி என் றொரு பெரிய பித்தளைத்தகடு பதிக்கப் பட்டிருந்தது. ஜயகுமாரன் வண்டியை விட்டிறங்கி உள் சென்றான். உள்ளே பெரிய ஹாலில் இரண்டு மின்சார விசி றிகள் ஓடிக் கொண்டிருந்தன. நான்கு குமாஸ்தாக்கள் நான்கு திண்டுகளில் தனித்தனியே அமர்ந்து கணக்குப் பதித்துக் கொண்டிருந்தார்கள். இடை யில் ஒரு பெரியதிண்டு காலியாகவே இருந்தது.

உட்சென்ற ஜயகுமாரனைக் கண்ட தும் அமர்ந்திருந்த நால்வரில் ஒருவர் "வாங்க சார்! உங்களுக்கு என்ன வேண்டும்?" என வினவினார். ஜயகுமா ரன் புன்னகையுடன் "தயாநந்தலாலை நான் சில நிமிடம் பார்த்துப் பேச வேண்டும்" என்று கூறினான். உடனே அவர் "சார்! இப்பொழுது லால்ஜீ பூஜையிலிருப்பார். மூன்று மணிக்கு மேல்தான் இங்குவருவார்." என்றான்.

"காலையி லிங்கு எத்தனை மணி வரையிலிருப்பார்?"

"பத்து மணிவரையில் சார்!"

"மாலையில்?"

"ஆறுமணி வரையில்...."

"சரி; அப்பொழுது நான் மாலைவந்து அவரைக் காண்கின்றேன். சென்று வருகிறேன்"

"அப்படியே சென்று வாருங்கள் சார்."

பிறர் நம்மைக் கண்டவிதம்

மார்க்கோபோலோ யாத்திரை

[திரு. சோமசுந்தர தேசிகர்]

II

மக்கள் படிம வழிபாட்டுக்காரர்; அவர்களுள் பலர் பசுவை மேலான பிராணியென்று கொண்டு வழிபடுகின் றனர். அவர்கள் ஒருபோதும் மாட்டி றைச்சியை யுண்ணவு மாட்டார்கள்; எக்காரணத்தை முன்னிட்டும் பசுவைக் கொல்லவுமாட்டார்கள். கோவியென் றொரு வகுப்பினர் வாழ்கின்றனர்; அவர்கள் பசுவைக் கொல்லாதபோதி லும் மாட்டிறைச்சி தின்பர்; இருந்தா லும் ஒரு பசு தானே யிறக்குமாயின் அதனை யுண்பர். இந்நாட்டினர் மாட்டுச் சாணத்தினால் வீட்டின் தரையை மெழு குகின்றனர். நிற்க, பெரியோர் சிறி யோர், அரசன், தலைவ ரெல்லோரும் தரையிலேயே உட்காருகின்றனர்; அவர் கள் பூமியிலேயே பிறந்து பூமிக்கே மீண்டுஞ் செல்வதால் பூமியிலுட்காரு வதே கண்ணியமான செய்கை யென்று கூறுகின்றனர். ஆகவே பூமிக்கு அதிக மரியாதை கொடாவிட்டாலும் அதனை யிகழ்தல் கூடாதென்பர்.

கோவி என்ற வகையினரைப் பற் றிக் கூறுமிடத்து, அவர்கள் என்ன கிடைப்பதானாலும் அர்ச் தோமையார்[1] அடக்கஞ் செய்யப்பட்டிருக்கிற விடத் துக்குச் செல்லவே மாட்டார்கள்; அவர் மாபாரில் ஒரு பட்டினத்தில் அடக்கஞ் செய்யப்பட்டிருக்கிறார்.[2] ஒரு கோவியை இருபது முப்பது பேராகச் சேர்ந்து பிடித்துக் கட்டிக் கொண்டாற் கூட, அவன் இயேசு நாதருடைய அபோஸ்தலரான அந்தத் தோமையார் அடக்கஞ்செய்யப்பட்ட விடத்தில் நிற்க

[1] St. Thomas.

[2] மயிலாப்பூரில் அடக்கஞ் செய்யப் பட்ட தாகக் கூறுவதுண்டு. மயிலாப்பூரின் கடற்க ரைப் பக்கம் அருகிலேயே சான்தோம் (San Thome) என்றுபேர் பெறும்.

மாட்டான். அந்த ஞானி கொல்லப்பட்டது அக் காலத்திருந்த மக்களாலானதால் அவருடைய செல்வாக்கு அவ்வளவுக்கு ஏறியிருக்கின்றது; அவர் எவ்வாறு கொலையுண்டாரென்பதைக் கூறுவேன். இந்த நாட்டில் நெல்தான் விளைகிறது; கோதுமை யென்பது தெரியவே தெரியாது. மற்றொரு வியக்கத்தக்க செய்தி சொல்லக்கூடியது குதிரைகளை உற்பத்தி செய்ய முடியாதென்பது; எத்தனையோ தடவை இதனைச் செய்து பார்த்தும் இயலவில்லை. நல்ல பொலி குதிரையும் குட்டிபோடக்கூடிய பெண் குதிரையும் சேர்த்தும், அவைகட்குண்டாகும் குதிரைக் குட்டி ஏறி சவாரிசெய்ய முடியாத முட்டிக்கால் தட்டும் குட்டியாக இருக்கிறது.

நாட்டு மக்கள் போருக்குச் செல்லும் போது மேற்கவசங்களின்றி ஈட்டியும் கேடயமும் கொண்டு செல்லுகின்றனர்; அவர்கள் தகுந்த வீரர்களுமன்று. விலங்கு பறவை உயிருள்ள பிராணி எதனையும் கொலைசெய்ய மாட்டார்கள்; தங்கட்காக அவ்வேலையைத் பிறரைக் கொண்டு செய்து கொள்கின்றனர். அவர்கள்—ஆடவரும் பெண்டிரும்—நாடோறும் இரு வேளைகளிலும் நீராடுகின்றனர்.

நீராடாதவர்களை நம் நாட்டுப் பதரிகளைப்போல அவர்கள் கேவலமாக நினைக்கின்றனர். உணவு கொள்ளும் பொழுது அவர்கள் வலது கையாலேயே உணவு கொள்ளுகின்றனர்; ஒருபொழுதும் உணவை இடது கையாற் றொட மாட்டார். தூய காரியங்களெல்லாம் வலது கையாற் செய்யப்படுகின்றன; வெளியிற் சென்று கால் கழுவுவது போன்ற தகாத காரியங்கட்கு இடது கையை யுபயோகிக்கின்றனர். இஃதே போன்று நீர்முதலாயின பருகுவதற்கும் அதற்கென வைத்துள்ள பாத்திரங்களினின்றும் பருகுகின்றனர்; ஒவ்வொருவனுக்கும் ஒருகுவளையுண்டு. ஒருவர் பருகும் பாத்திரத்தை எடுத்து பிறனொருவன் பருகுவதில்லை. அவர்கள் பருகும் போதும் வாயில் வைத்து உறுஞ்சாமல் தூக்கி வாயில் விழும்படி குடிக்கின்றனர். எவரும் எக்காரியத்தை முன்னிட்டும் குவளையை வாயில் வைத்துப் பருகவும் மாட்டார்கள்; பிறனுக்குங் கொடுக்கவும் மாட்டார்கள். பிறரிடம் பாத்திரமில்லா விட்டால் அவர்கள் கையில் நீரை விடுவர்; அவர்கள் அதனைப்பாத்திரமாகக்கொண்டு பருகுவர்.

அவர்கள் குற்றஞ் செய்தோரைத் தண்டிப்பதில் மிக்க கடுமையுடையவர்கள்; சாராயம் குடிப்பதுமில்லை. அவர்கள் குடிகாரரையும் கப்பலேறித் தேசாந்தரஞ் செல்லுபவரையும் பிணையாக ஒப்புவதில்லை. அவர்கள் தேசாந்தரஞ் செல்லுபவனை அயோக்கியனெனப் பாவிப்பதோடு அவன் கூறும் சாட்சியத்தையும் நம்பத்தகாததென்கின்றனர். இருந்தாலும் காமுகனுக்கு விருப்பது பாவச்செயலன்றெனக் கருதுகின்றனர். கடனைப் பற்றப் பின்கண்ட விதிகளைக் கையாளுகின்றனர். கடன் பட்டவனைக் கடன்கொடுத்தவன் பலதடவை கடனைக் கொடுக்கும்படி கேட்டும் அவன் கொடாமலிருந்தால் அவனைக் கண்டபோது கடன் கொடுத்தவன் கடனாளியைச் சுற்றியொரு கோடு கிழித்துவிடுவானாயின் பின்னவன் கடனுக்கு வழி செய்தாயினும் தகுந்த பிணைகொடுத்தாயினும் கோட்டைவிட்டு அகலவேண்டும். அவ்வாறின்றிக் கடனாளி கோட்டைக் கடந்து செல்வானாயின் அவனை நெறியினின்றும் வழுவினவனாகக் கருதி உயிர் வாங்குவர். மார்க்கோவாகிய நானே ஊர் திரும்பும் பயணத்தில் இவ்வாறு நடந்ததை நேரிற் கண்டேன். அந்நாட்டு அரசன் ஒரு வணிகனுக்குக் கொடுக்க வேண்டிய தொகை மிகுதியுமிருந்தது. வணிகன் பலதடவைகளில் மன்னவனை யணுகியும் தொகை பெறவில்லை. ஒரு நாள் அவ்வரசன் குதிரை யிவர்ந்து செல்லக்கண்ட வணிகன் தனக்கு அபயம் வாய்த்ததென்க் கண்டு அரசனையும் குதிரையையுஞ் சுற்றிக் கோடிட்டுவிட்டான். என் செய்வான் அரசன்! அவ்வாணையைக் கடக்காமனின்று வணிகனுக்குச் சேரவேண்டிய தொகை முழு

வதையுஞ் செலுத்தினன். நாட்டினர் அம்மன்னவன் நீதி நெறியினின்றும் வழுவாதவனென்று கொண்டாடினர்.

அங்கு வெப்பம் மிகுதியாக விருப்பதைப் பார்க்க அதிசயமாக விருக்கும். அவ்விடத்தில் ஜூன் ஜூலை ஆகஸ்டு என்ற மூன்று மாதங்கள் மட்டுமே மழைபெய்கிறது. இந்த மூன்று மாதங்களிலும் மழைபெய்து பூமி தழைத்துக் காற்று குளிர்ச்சியாக அடிக்காவிட்டால் காய்ச்ச லதிகமாகி யொருவருமே உயிர்வாழ முடியாது. முகலக்ஷண சாஸ்திர[1] மென்றொரு கலை அவர்கள் நன்கறிந்தது; அதனைக் கொண்டு மக்களுடைய குணஞ் செய்கைகளை வெகு விரைவாகக் கண்டுகொள்வர். அவர்கள் புள் விலங்கு முதலாயினவற்றைக் கண்டு அதன் பலனையும் நன்கு அறிவர்; உலகத்திலுள்ள மக்களில் சகுன சாஸ்திரங்களைக் கவனிப்பவர்களில் இவர்களே முதல்வராவர். ஒருவன் தெருவழியே போகும்போது பிறனொருவன் தும்மினால், அது நல்ல பலனைத் தருமெனக் கருதினால் மேலே செல்லுவான்; அன்றி வேறுவகையாக விருப்பின் சற்றுதாமதிப்பன்; சில வேளை பயணத்தையே நிறுத்தி விடுவான். ஒருவனுக்கு ஒரு பிள்ளை பிறந்தவுடன், அதற்குச் சாதகம் எழுதுகின்றான்; சாதக மென்பது குழந்தை பிறந்த நாள், நாழி, மாதம், திதி இவைகளைக் குறிப்பது. இவ்வழக்கத்தை யவர்கள் கையாளக் காரணம் அவர்கள் செய்யும் ஒவ்வொரு காரியமும் சோதிட சம்பந்தமானது; சூனியம், கருவித்தை, தொடுகுறிபோன்ற சில கெட்ட வழிகளைக் கையாளுபவர்; சிலர் சோதிடத்திலும் வல்லவர். ஆண்பிள்ளைகளுடைய ஒவ்வொரு குடும்பத்தினரும் பிள்ளைக்குப் பதின்மூன்று வயதானவுடன் வீட்டைவிட்டு வெளியேற்றி விடுவதோடு அவர்களைக் காப்பாற்றுவதுமில்லை. பிள்ளைகள் தாங்களே வியாபாரஞ் செய்து சம்பாதிக்கக் கூடியவர்களென்று பெற்றோர் கூறுகின்றனர். அதனால் அவர்கள் தம் மக்களைச் சிறு திரவியத்துடன் அனுப்பி விடுகிறார்கள். அவர்கள் இங்கு மங்கு மலைந்து ஏதோ வாணிபஞ் செய்கின்றனர். முத்துச் சலாபம் குளிக்குங் காலத்தில் அங்கே சென்று தங்கள் தகுதிக்கேற்ப நாலைந்து முத்துக்களை விலைக்குப் பெற்று வெப்பத்துக் கஞ்சி வீட்டினுள்ளேயே யிருக்கும் பெருவணிகரிடம் சென்று 'இது இன்ன விலைக்கு வாங்கியது' இதற்குள்ள ஊதியந் தாருங்க'ளென்று பெறுகின்றனர். முதல் நீங்க மிகுதியுள்ளதற்கு உணவுப் பண்டங்கள் வாங்கித் தம் தாயிடம் கொடுத்துச் சமைத் துண்கின்றனர். அவ்வாலிபர்கள் ஒருபோதும் குடும்பத்திலுண்பதில்லை. இவ்வாறு வாணிபத்திற் பழகித் தேர்ந்து வணிகராகின்றனர்.

இந்த நாட்டிலும், இந்தியா முழுவதிலும் பறவைகளும் விலங்குகளும் நம் நாட்டிலுள்ளவை போலன்றி வேறுபட்டிருக்கின்றன. ஒரோவொரு பறவை-காடை மாத்திரம் - ஒரே மாதிரியாக விருக்கின்றது. மற்றவை யெல்லாம் வேறு மாதிரிதான். அங்கே வெளவால் - இரவில் பறக்கும் இறகற்ற பிராணி - இருக்கின்றன; அவை நம் நாட்டு கோஷாக் (Goshawk) கைப் போன்றிருக்கின்றன. அவர்களுடைய கோஷாக் பறவை காக்கையைப் போல் கறுமையாயிருப்பதோடு விரைவாகவும் உறுதியாகவும் பறக்கின்றன. மற்றொரு அதிசயமான சமாச்சாரம் என்னவென்றால் அவர்கள் குதிரைகளுக்குச் சமைத்த சோறும் ஊனும் மற்றும் பல சமைத்த உணவுகளும் ஆகாரமாகக் கொடுக்கின்றனர். இவைதான் குதிரைகள் இறப்பதற்குக் காரணம்.

அங்கே சில மடங்கள்[1] இருக்கின்றன; அவற்றில் ஆண் தெய்வங்களும் பெண் தெய்வங்களுமுண்டு; அவற்றிற்குச் சிறுமிகள் பலர் அர்ப்பணஞ் செய்யப்படுகின்றனர். அவர்களை அவர்

[1] Art of Physiognomy.

[1] கோயில்.

களுடைய பெற்றோர் விரும்பிவழிபடும் தெய்வத்திற்கு அர்ப்பணம் செய்கின்றனர். ஒரு மடத்துத் தலைவர் கடவுளுக்கு விருந்தொன்று நடத்த விரும்புகிறபோது அக்கோயிலுக்கு அர்ப்பணஞ் செய்யப்பட்ட மங்கையரையழைத்துப் பாடும்படியும் ஆடும்படியுஞ் செய்கின்றனர். அம்மங்கையர் கடவுளுக்கு எல்லாவற்றோடும் ஊனும் சமைத்துக்கொண்டு வருகின்றனர்; அதாவது அம்மங்கையர் பலவகை உருசியுள்ள கறிகளும் உணவுகளுஞ் சமைத்து, எடுத்துவந்து கடவுள் முன்னர் வைத்துவிட்டுச் சிறிது நேரம் அப்புறம் செல்கின்றனர்; இவர்கள் நமது நாட்டில் ஒரு பிரபு உண்ண எடுத்துக்கொள்ளும் நேரம் ஆடியும் பாடியுங் காலங் கழிக்கின்றனா. அந்தக் காலத்துக்குள் கடவுள் உணவுப் பொருள்களிலுள்ள சத்தை உண்டிருப்பாரென்று சொல்லி அவைகளை யெடுத்து வந்து பின்பு தாங்கள் சிரிப்பும் விளையாட்டுமாகக் காலஞ்செலுத்தி அருந்துகின்றனர். இதுமாதிரியாக ஆண்டுதோறும் பல தடவை தாங்கள் மணந்துகொள்ளும்வரை செய்கின்றனர்.

இவ்வாறு இம்மங்கையரைக் கூட்டுவதன் காரணம், கடவுள் தேவியோடு கோபமாகவிருந்து பேசாம லிருக்கின்றன ரென்றும், அவர்கள் சமாதானமாக வாழாவிட்டால் ஊர் பாழாகுமென்றும், அவர்களுடைய வாழ்த்து உண்டாகுமென்றும் அவர்கள் கூறுகின்றனர். ஆதலால் கடவுள் முன் இம் மங்கையரை நிர்வாணமாக வந்து ஆடிப் பாடும்படி ஏற்பாடு செய்யப்படுவதாக அவர்கள் கூறுகின்றனர். இந்தச் சனங்கள் கடவுள் அடிக்கடி தேவியோடு உல்லாசமாக வாழ்வதாகக் கருதுகின்றனர்.

இந்நாட்டு ஜனங்கள் மெல்லிய பிரம்பாற் செய்த மஞ்சத்தில் உறங்குகின்றனர்; அவர்கள் மஞ்சத்தில் ஏறியதும், பக்கங்களிலுள்ள கயிற்றை இழுக்க, அம்மஞ்சம் மேட்டுவளைவரை செல்ல, அங்கே இரவிற் றூங்குகின்றனர்.[1] இதுமாதிரி செய்வது ஈக்கடி புழுக்கடி முதலியவற்றினின்றும் தம்மை நீக்கிக் கொள்வதற்காகவென்று கூறுகின்றனர். இவ்வாறு பொதுமக்கள் செய்வதில்லை; பிரபுக்களும் பெருமக்களும் இவ்வாறு செய்ய, நாட்டு ஜனங்கள் தெருவிலுறங்குகின்றனர்.

நான் இதுவரை மாபார் நாட்டைப் பற்றிக் கூறினேன்; இனி மற்றொரு நாட்டிற் காணும் அதிசயங்களைப் பற்றிக் கூறுவேன்.

அர்ச். தோமையார் அடக்கஞ் செய்யப்பட்ட இடத்தைப்பற்றியும் அதிசயங்களைப்பற்றியும்

அபோஸ்தலரான அர்ச்—தோமையார் மாபார் நாட்டிலே ஒரு சிற்றூரிலடக்கஞ் செய்யப்பட் டிருக்கின்றார்.[2] அவ்வூரில் அதிக குடிகளில்லை; அங்கே வியாபாரஞ் செய்யக்கூடிய பண்டங்கள் அதிகமாகக் கிடைப்பதில்லையாகையால் வியாபாரிகள் செல்லுவதில்லை; அவ்விடத்திற்குச் செல்லவும் சரியான வழியுமில்லை. ஆயினும் கிறிஸ்தவரும் முகமதியரும் பரிசுத்த ஸ்தலமாகக் கருதி யாத்திரை செல்லுகின்றனர். முகமதியரும் அவர் தங்கள் மதத்தினரென்று கூறி அவருக்கு அவரியன் (Avarian) என்ற பட்டமுஞ் சூட்டி வணங்குகின்றனர். அவரியன் என்ற சொல்லுக்குக் கடவுட்டன்மை யுடையவ னென்பது பொருள். அங்கு யாத்திரை செல்லுகின்ற கிறிஸ்தவர்கள் தோமையார் கொல்லப்பட்ட இடத்திலிருந்து சிறிது மண்ணைக் கொண்டுவருவர். மூன்று முறை நான்காமுறைச் சுரமடிப்பவர்கட்கு அந்த மண்ணைக் கரைத்துக் குடிக்கக் கொடுத்தால் கடவுள் கருணையாலும் தோமையார் கருணையாலும் அந்தச் சுரநோய் அறவே யொழிந்து

---

[1] இது இந்நாட்டு வழக்கமன்று. ஒருகால் ஊஞ்சலாக இருந்தாலும் இருக்கலாம்.

[2] மயிலாப்பூரென்று முன்னமே கூறப்பட்டது.

விடுகிறது. அந்த மண் சிவப்புநிறமுடையது.[1] 1288-ம் ஆண்டு ஒரு அதிசய சம்பவம் நடந்தது; அதனைக் கூறுவேன். அந்நாட்டிலிருந்த பிரபு ஒருவர் தனக்கு உரியதான நெல்லையெல்லாம் கோயிலைச் சுற்றியுள்ள கிறிஸ்தவர் வீடுகளில் நிரப்பி விட்டனர். அங்குள்ள கிறிஸ்தவர்களுக்கும் வந்த யாத்திரிகளுக்கும் படுக்கவும் தங்கவும் இடமே யில்லை. ஜனங்கள் எவ்வளவு மன்றாடியும் அப்பிரபு நெற்சேர்களை யப்புறப்படுத்த சம்மதிக்கவில்லை. ஒருநாளிரவு தோமையாரே ஒரு சாப்பாரி முள்ளுடன் அப்பிரபுவின் கனவிற்றோன்றி நெல்லை அப்புறப்படுத்தா விட்டால் அந்த முள்ளால் தொண்டையிற் குத்துவதாகப் பயமுறுத்தக் கனவு கண்டான். மறுநாட்காலையில் நெல்லையெல்லாம் அப்புறப் படுத்தியதோடு வந்தவர்களிடம் தான் இரவுகண்ட கனவையும் கூறினான். அதற்கு அங்கிருந்த கிறிஸ்தவரெல்லாம் பிரார்த்தனை செலுத்தினர். இதுபோன்ற கிறிஸ்தவர்களுள் முடம் கூன் நீங்கிய பல அதிசயங்களுமுண்டு.

[1] இந்த நாட்டிலேயே மண் செவ்வல் நிறமுடையது.

இடியேறு

சென்குப்தா

வங்காள தேச பக்தர் சென்குப்தா இவ்வுலக வாழ்வு நீத்தமை குறித்து வருந்துகிறோம். சித்த ரஞ்சின தாஸ் மறைந்த நாள்தொட்டு, அவர்தம் அடிச்சுவட்டைப் பற்றித் தேசத்தொண்டு செய்துவந்த பெருமை அறிஞர் சென்குப்தாவுக்கு உண்டு. தேசத்தின் பொருட்டுச்சென்குப்தா மேற்கொண்ட தியாகம் அளவில் அடங்காதது. சென்குப்தா சிறந்த பேர்பெற்ற பாரிஸ்டர். அவர் தேச சேவையில் ஈடுபடாது, தந்தொழிலிலேயே ஈடுபட்டிருப்பரேல், அவர் இலட்சாதிபதியாக வாழ்ந்து உயிர் துறந்திருப்பர் என்பதில் ஐயமில்லை. சென்குப்தாவின் பிற்கால வாழ்வு, சிறை வாழ்வாகவே முடிந்தது உலகறிந்த தொன்று. அவர் அடிக்கடி சிறைபுக நேர்ந்தமையே அவர்தம் அகால மரணத்துக்குக் காரணம் என்று கூறல் மிகையாகாது. தேசபந்துவுக்குப் பின்னைத் தேசபந்துவாக வங்கம் பெற்றிருந்த சிங்கம் வீழ்ந்து பட்டது தேசத்தின் துரதிர்ஷ்டமேயாகும். சென்குப்தாவின் இன்னுயிர் ஆண்டவன் அருளொளியில் அமைதி பெற்று நிலவுவதாக.

காங்கரஸ்

காங்கரஸ் ஒரு சிறந்த அமைப்பு; தேசிய அமைப்பு. அதன் தற்போதைய நிலைமை இரங்கத்தக்கதாயிருக்கிறது. ஸ்ரீமான் ஆனே விடுத்த அறிக்கையைப்பற்றிப் பல திறவியாக்கியானங்கள் வெளி வந்துகொண்டிருக்கின்றன. தலைவர்கள் என்போர், வேதாந்த சூத்திரங்களைப்போலப் பல திறப் பொருள்களைத் தரக்கூடிய அறிக்கைகளை விடுப்பது தவறு. அரசியல் தொடர்பு கொண்ட அறிக்கைகள் தெளிந்த - வெளிப்படையான-பொருள் கொண்டனவாக விருத்தல்வேண்டும். ஸ்ரீமான் ஆனே அறிக்கை மிகச் சுருங்கிய முறையில் வெளிவர நேர்ந்தமையான், அது பலவாறு பொருள் செய்யப்படுகிறது. காங்கரஸ் கூட்டத்தாருள் இருவகைக் கருத்து உலவிவருதல் வெள்ளிடைமலை. ஒன்று சட்டசபையைத் துறப்பது; மற்றொன்று சட்டசபையைப் பற்றுவது. பின்னையது தலைவர்களிடை ஆக்கம்

பெற்று வருகிறது. தலைவர்களிடை ஆக்கம் பெற்று வரும் ஒன்று நாளடைவில் தேசத்தில் ஆக்கம் பெறுவதாகும். காங்கரஸைச் சட்ட மறுப்பில் ஈடுபடுத்த பல தலைவர்கள் விரும்புகிறார்களில்லை. காங்கரஸின் எதிர்கால நிலை சட்டசபை நுழைவதாகும் என்பதற்குப் பலவகை அறிகுறிகள் தோன்றி வருகின்றன. இந்நுட்பங் கண்டே காந்தியடிகள் காங்கரஸ் சார்பில் கடனாற்ற ஒருப்படாது தனிமுறையில் கடனாற்ற ஒருப்பட்டனர். தற்போது நேர்ந்து வரும் நிகழ்ச்சிகளை நோக்குழிக் காங்கரஸ் சட்டசபை நுழைவுக்கு ஆதரவளிப்பது நல்லது.

காந்தியடிகள்

காந்தியடிகள் தற்போது விடுதலையடைந்திருக்கிறார். உண்ணாவிரதங் காரணமாக அடிகள் எர்வாடா சிறையினின்றும் ஸாஸூன் வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டார். தீண்டாமை விலக்குப் பிரசாரத்துக்குப் பழையபடி தமக்குப் போதிய வசதி அரசாங்கத்தாரால் கொடுக்கப்படவில்லை என்று அடிகள் சிறையில் உண்ணாவிரதந் துவங்கினார். அவ்விரதங் கண்டாதல் அரசாங்கத்தார் அடிகளின் வேண்டுதலுக்கு இணங்க மனங்கொண்டாரில்லை. அன்பர் ஆண்ட்ரூஸ் துரைமகனார் அடிகட்கும் அரசாங்கத்துக்கும் இடையில் நின்று சமாதான முயற்சியில் தலைப்பட்டார். அடிகளின் வேண்டுதலுக்கு இணங்கினால் விண்ணிடிந்து விழுந்துவிடும் என்று அரசாங்கம் கருதியது போலும். அடிகள் அடிக்கடி உண்ணாவிரதங்கொள்வதை அரசாங்கம் ஊன்றிக் கவனித்தல்வேண்டும். குறைபாட்டை உண்ணாவிரத வாயிலாக முறையிடுவதினுஞ் சிறந்த நாகரிக முறை வேறொன்றிருப்பதாகத் தெரியவில்லை. நுட்பம் உணர்ந்து அரசாங்கம் கடமைப்பட்டு நடப்பது அழகாகும். லார்ட் வெல்லிங்டன் அரசாட்சி, அஹிம்சையில் சிறந்து விளங்கும் ஒருவரிடத்தில் நடந்துகொண்டு வரும் முறை ஒழுங்காகத் தோன்றவில்லை. தள்ளாத வயதில், பலமுறை சிறை புகுந்தும், பலமுறை பட்டினி கிடந்தும் புறக்கரணங்களும் அகக்கரணங்களும் வற்றிய ஒருவர், ஒரு சிறு காரணத்தை முன்னிட்டு உண்ணாவிரத மிருந்ததை அரசாங்கம் பார்த்துக் கொண்டிருந்தது. இப்பொழுது அவரை விடுதலை செய்தது. அரசாங்கமும் காந்தியடிகளும் ஒரு நன்முடிவுக்கு வருதல் நல்லது. காந்தியடிகளின் உடல் நிலை நலம் பெறுக பெறுக என்று ஆண்டவனை வழுத்துகிறோம்.

ரிக்வேதம் (தமிழில்)

(மாதாந்தரப் பத்திரிகையாக ரிஜிஸ்தர் செய்தது)

ரிக்வேதம் தமிழில் 64 மாதங்களில் மாதம் ஒரு அத்தியாயமாக 1933ஹு ஏப்ரல் மாதத்திலிருந்து வெளிவந்துகொண்டிருக்கிறது. எட்டு மாதப் பாகங்கள் கொண்டது ஓர் அஷ்டகம் (வால்யம்). எட்டு அஷ்டகங்கள் கொண்டது ரிக்வேதம் முழுவதும். ஒவ்வோர் அஷ்டகத்தின் முடிவிலும் வடமொழி மூலம் வெளிவரும். சந்தா விவரம்:

பெதர்வெயிட் காகிதப் பதிப்பு	8 மாத பாகங்களுக்கு ரூ 8—0—0
கிளேஸ் காகிதப் பதிப்பு	8 மாத பாகங்களுக்கு ரூ 4—0—0

காரியதரிசி, வேதப்ரவசன மந்திரம்,
27, முத்து முதலி வீதி, இராயப்பேட்டை, சென்னை.

வித்வான்
ந. சண்முகக் கவிராயரின்

மகாபாரதம் தமிழ் வசனம்

திருத்தமான உயர்ந்த பதிப்பு. இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்கு அச்சிடப்பட்டு கலிகோ பயிண்டு செய்யப்பட்டிருக்கிறது.

(1) ஆதிபர்வம் ரூபா 3. (2) சபா, ஆரணிய, விராட பர்வம் அடங்கியது ரூபா 5. மற்றவை அச்சில்.

பாலவிநோதினி ஆபீஸ்,
323, திருவொற்றியூர் ஹைரோட், வண்ணாரப்பேட்டை, மதராஸ்.

வெள்ளி பஸ்பம்

வெள்ளை, வெட்டை, மூலங்கள், எலும்புருக்கி, சீரிழிவு, வெடி சம்பந்தகுன்மம் பெரும்பாடு எல்லாம் தீரும். தளர்ந்த தாது வலுக்கும். மற்ற நோய்களுக்கும் மருந்துண்டு. வியாதியின் விபரம் எழுதினால் தக்க பரிகாரம் மருந்துடன் தெரிவிக்கப்பெறும். 5 நாளில் நிச்சயம் குணம் தெரியும். 40 நாள் மருந்தின் விலை ரூபா 2-8-0.

விலாசம் :—

செ. விசுவநாத செட்டியார்,
வைத்யம். வாலுகுடி, திருச்சி ஜில்லா.

இதோ! தாது புஷ்டி.

மதன மஞ்சரி

இம் மாத்திரைகள் 35 வருஷங்களாய் உலகமெங்கும் புகழ் பெற்றவை. இது பலவீனம், மலச்சிக்கல், ஞாபகக் குறைவு, நரம்புத் தளர்ச்சி முதலிய வியாதிகளைப் போக்கி நல்ல ரத்த விருத்தியும் தாதுபுஷ்டியும் கொடுத்து இல்லற வாழ்க்கையில் இன்பத்தையும் ஊக்கத்தையும் தரும். 40 மாத்திரைகளடங்கிய டப்பி விலை ரூபா 1.

இனம்! வைத்திய வித்தியா இனம்!!

விபரம் வேண்டுவோர் இனமாய் எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

மதன மஞ்சரி பார்மசி
1/94, சைனபஜார், மதராஸ்.

ஏஜண்டு :—

M. S. ம K. B அண்டு கோ.,
No. 14, டக்தோகிரமாட் ரோட்,
பினங்கு.

T D. மதுர நாயகர் அண்டு கோ.,
No. 211, செட்டிக்தெரு, கொழும்பு.

ஆனந்த மெடிகல் ஹால்.
No. 165, செட்டித்தெரு, கொழும்பு.

அமிர்த சாகரம்

தேக பலத்தையும், இரத்த விருத்தியையும், தாது புஷ்டியையும் கொடுப்பதில் எங்களுடைய

ஆதங்கநிக்ரஹ மாத்திரைகள்

அமிர்த சாகரம் போன்றவை. 32 மாத்திரைகளடங்கிய டப்பி 1 க்கு ரூபா 1.

இனம்! இனம்!

இன்ப வாழ்க்கையிலடைந்த சக்தி

என்னும் ஆரோக்கிய மலரைக் கேட்போருக்கு இனமாகவும் தபாற் செலவில்லாமலும் அனுப்பப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

தாதுபுஷ்டிக்கு

மன்மத குளிகை

வாலிபப் பருவத்தில் முறைதவறிய தீச்செயல்களால் நீங்கள் இழந்த பலம், தாது நஷ்டம், போகசக்திக் குறைவு இவைகளைப்போக்கி மன உற்சாகத்தை திரும்பக் கொடுத்து, இல்லற ஒற்றுமை, வீரிய விருத்தி முதலியவைகளை யுண்டாக்கும். ஒருமுறை உபயோகித்துப் பாருங்கள்.

20 குளிகை ரூபா 2.

வி. பி. செலவு வேறு.

C. மலையப்பசாமி,
நித்தியானந்த வைத்தியசாலை, பழனி. S. I.

நவசக்தி

பெரிய புராணம்

மூலமும்

அரும்பத விசேட ஆராய்ச்சிக் குறிப்புரையும்

வசனமும்

சஞ்சிகை சஞ்சிகையாக வெளிவருகின்றன

ஏழை மக்கட்கு நல்ல சந்தர்ப்பம் !

சேக்கிழார் பெருமான் திருவாய் மலர்ந்தருளிய திருத்தொண்டர் புராணமென்னும் பெரிய புராணத்தைப் பற்றித் தமிழ் மக்கட்கு விரித்துக் கூற வேண்டுவதில்லை. பெரியபுராணமெங்கும் பத்திச் சுவை நனி சொட்டிக் கொண்டிருத்தல் வெள்ளிடைமலை. தன்னை ஓதுவோரையும் கேட்போரையும் அன்புக் கடலில் திளைப்பிக்கும் பேராற்றல் வாய்ந்தது பெரிய புராணம். கடவுள் அன்பு, ஆன்ம நேயம், திருத்தொண்டு, சீர்திருத்தம், சொல் நயம், பொருள் நயம், தமிழின்பம் முதலியவற்றிற்குப் பெரிய புராணம் ஒரு வைப்பு என்று கூறல் மிகையாகாது. சிறந்த தமிழ்க் காவியங்களுள் பெரிய புராணமும் ஒன்று என்று சுருங்கச் சொல்லலாம்.

இத்தகைய அரும்பெரு நூலின் மூலமும், "நவசக்தி" ஆசிரியர் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் எழுதிய அரும்பத விசேட ஆராய்ச்சிக் குறிப்புரையும் வசனமும், அன்பர்கள் எளிதில் வாங்கிப் பயன்பெறும் பொருட்டு மாதந்தோறும் சஞ்சிகை உருவில் வெளிப்படுத்தப் படுகின்றன.

ஓலைப் பிரதிகளைக்கொண்டு மூலம் ஒப்பு நோக்கப்படுகிறது. பொருந்திய பாடபேதங்கள் குறிக்கப்படுகின்றன. 25 ஆண்டுகளுக்குமுன் வெளிவந்த பதிப்புக்கும் இப்பதிப்புக்கும் பலதிற வேற்றுமைகளுண்டு. குறிப்புரை, பதவுரை போலத் துணைசெய்யும். இக்காலத்துக்கு இன்றியமையாத ஆராய்ச்சி விசேடங்களும் பொறிக்கப்படுகின்றன.

சுமார் 25 சஞ்சிகையில் புத்தகம் முடிவு பெறலாம். பின் விலை புத்தகம் ஒன்று 7 ரூபாய்க்கு மேலாகும்.

அன்பர்கள் உடனே சந்தாதாரர்களாகச் சேர்வார்களாக.

சந்தா விவரம்

புத்தக முழுவதற்கும் முன்பணம்—சென்னை ரூபா 5.
" " " வெளியூர்—தபாற் செலவுடன் " 6.

மாதச் சஞ்சிகை ஒன்றன் விலை அணா 4—சென்னைக்குமட்டும்.

6 சந்தாதாரர்களைச் சேர்த்தனுப்புவோருக்கு ஒரு சஞ்சிகை அதிகமாக அனுப்பப்படும்.

காரியஸ்தர் :—முருகவேள் புத்தகசாலை,
12, கணபதி முதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை.

"நவசக்தி" ஆசிரியர்

திருவாளர் - திரு. வி. கலியாணசுந்தர முதலியார்

இயற்றிய நூல்கள்

தமிழ் மணம் வேண்டுமா, விடுதலை வேண்டுமா,

பெண் ணுரிமை வேண்டுமா,

தீண்டாமை யொழிதல் வேண்டுமா,

சமரசம் வேண்டுமா, சன்மார்க்கம் வேண்டுமா,

இயற்கை யின்பம் வேண்டுமா,

வீரச்சுவை ததும்பப் பேசவும் எழுதவும் வேண்டுமா?

வேண்டுமானல்

"நவசக்தி" ஆசிரியர் திருவாளர் - திரு. வி. கலியாணசுந்தர முதலியார் இயற்றிய நூல்களை வாங்கிப் படித்துப்பாருங்கள். அந்நூல்கள் வருமாறு:—

	ரூ.	அ.
பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை	2	0
தமிழ்த் தென்றல்	2	0
முருகன் அல்லது அழகு	1	0
இராமலிங்கசுவாமிகள் திருவுள்ளம்	0	12
மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்	2	8
என்கடன் பணிசெய்து கிடப்பதே	0	8
சைவத்தின் சமரசம்	0	8
சைவத்திறவு	0	8
கடவுள் காட்சியும் தாயுமானவரும்	0	4
தமிழ் நூல்களில் பௌத்தம்	0	4
சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து	0	8
நாயன்மார்	0	3
சைவ சமய சாரம்	0	1
இமயமலை அல்லது தியானம்	0	6
தமிழ்நாடும் நம்மாழ்வாரும்	0	4
உரிமைவேட்கை அல்லது நாட்டுப்பாடல்....	0	4
முருகன் அருள் வேட்டல்	0	4
சமரச சன்மார்க்க போதம்	0	8

இந்நூல்கள் எல்லாவற்றையும் ஒரே காலத்தில் வாங்குவோர்க்குத் தபால்செலவின்றி மணியார்டர் கமிஷன் கழித்து வி.பி.-யில் அனுப்பப்படும்.

முருகவேள் புத்தகசாலை,

12, கணபதிமுதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை.

ஸ்ரீராமகிருஷ்ண மடத்துப் பிரசுரங்கள்

	ரூ.	அ.
ஸ்ரீ ராமகிருஷ்ண தேவரின் திவ்ய சரிதம் (விரிவானது) ...	5	0
ஸ்ரீ ராமகிருஷ்ண சரிதம் (சுருக்கம்) ...	0	8
ஸ்ரீ ராமகிருஷ்ண வசனாமிருதம் ...	1	8
ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் 1003 உபதேச மொழி ...	1	6
குருதேவர் வாக்கியம்	0	5
நமது தாய்நாடு	0	8
பக்தியோகம்	0	10
கர்மயோகம்	0	12
சிகாகோ பிரசங்கம்	0	5
விவேகானந்தரின் கடிதங்கள் ...	0	8
எனது போர் முறை	0	2
பவஹாரி பாபா	0	3
ஜகஜீவபர விளக்க வினாவிடை ...	0	13
பக்தி மார்க்கம்	0	2
முத்திநெறி	0	5
எல்லாவற்றிலும் இறைவனைக் காணல்	0	2

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்,

மயிலாப்பூர், சென்னை.

கன்றுங் கனியுதவும்

பண்டிதர் - எல். உலகநாத பிள்ளை அவர்கள்

இயற்றியது

விலை அணா. 10.

முருகவேள் புத்தகசாலை, இராயப்பேட்டை, சென்னை.

பாம்பன்:

ஸ்ரீமத்-குமரகுருதாச ஸ்வாமிகள்

இயற்றிய நூல்கள்

	ரூ.	அ.
[illegible] 2-ஆம் பதிப்பு	0	8
ஸ்ரீ சுப்பிரமணிய வியாசமும் குருசிட [illegible] வியாசமும் 1-ஆம் பதிப்பு	1	0
சைவவியாசம்	0	10
[illegible] 2-ஆம் பதிப்பு	0	11
பத்துப் பிரபந்தம்	0	7
அகராதி [illegible] உரையாசிரிய சதானந்த சாகரமும்	2	8
பரிபூரணானந்த போதமும் உரையாசிரிய [illegible] பிரகாசமும்	2	0
சத்தாச்சைவ நிர்ணயம்	0	3
திருப்பாவும், உரையாசிரிய [illegible] குருபிடமணமும்	10	0
ஸ்ரீமத் குமாரஸ்வாமியம்	5	0
சேக்கிழார் [illegible], சேக்கிழார் [illegible]	0	6
திருமுறைத்திரட்டு 6-ஆம் பதிப்பு	0	6
குமாரவேள் பதிற்றுப்பத் தந்தாதி [illegible]-ஆம் பதிப்பு	0	2
குமரகுருதாச ஸ்வாமிகள் பாடல் திருவலங்கற்றிரட்டு 1-ஆம் மண்டலம் திருவலங்கற்றிரட்டு 2-ஆம் மண்டலம் முதலியன அடங்கிய நூல்	3	8
[illegible] மொழிபெயர்ப்பு	0	2
சண்முக சகஸ்ரநாமார்ச்சனை	0	4
[illegible]	0	1½
ஷெ. [illegible]	0	2¼
பாம்பன்: ஸ்ரீமத் குமரகுருதாச ஸ்வாமிகள் சரித்திரம்	0	8
ஷெ. சரித்திரச் [illegible]	0	12

ஜோதிட நூல்கள்

	ரூ.	அ.
[illegible] ஜோதிட சஞ்சீவி ...	1	8
[illegible] பொக்கிஷம் ...	1	0
ஜோதிட பாரா சாரியம் ...	0	12
[illegible] ...	0	12
[illegible] ...	1	0
[illegible] ...	2	4
ஜோதிட [illegible] ...	0	6
ஜோதிட [illegible] 1, 2, 3, 4 [illegible] ...	1	0
[illegible] ...	1	0

வைத்திய நூல்கள்

	ரூ.	அ.
புலஸ்தியர் கற்பம் 300 ...	1	0
அகஸ்தியர் பன்னிருகாண்டம் வைத்தியம் 200 ...	0	12
அகஸ்தியர் அமுத கலைஞானம்	1	4
அகஸ்தியர் வைத்திய ரத்தினச் சுருக்கம் 300 ...	0	12
இராம தேவரென்ற யாகோபு [illegible] 155 ...	0	12
,, [illegible] செந்தூரம் 300க்கு குண்டிரம் 150 ..	0	10
,, [illegible] செந்தூரம் 300 ...	0	12
,, பஞ்ச [illegible] 300 ...	0	14
,, வாத வைத்தியம் 300 ...	0	14
,, வாத சூத்திரம் 400 ...	1	4
,, தண்டகம் 100 ...	0	12
,, வைத்திய சூத்திரம் 150	0	10
,, வைத்தியம் 300 (மருந்து சுத்திமுறை காடி விவரமும்)	0	14
,, சுண்ணம் 600 ...	1	8
,, வைத்திய சிந்தாமணி 700	1	8
,, வைத்திய கல்லாடம் ...	1	4
,, சுண்ணம் 300 ...	0	14
சித்த வைத்திய அகராதி ...	2	8
திருவள்ளுவர் பஞ்சரத்தினம் ...	2	0
பதினெண் சித்தர்கள் வைத்திய வாதயோக ஞான சாஸ்திரத் திரட்டு	1	8
அகஸ்திய முனிவர் பூரண சூத்திரம்	0	12
இராம தேவர் சிவயோகம் ...	0	8
அகஸ்திய முனிவர் கற்ப[illegible] குரு நூல் 100-ம் பரிபூரண [illegible] 100-ம்	0	12
கருவூரார் வாதகாவியம் 700 ...	1	0
சட்டைமுனிவர் ஞானம் ...	0	4
அகஸ்தியர் வைத்திய பூரணம் 205	0	12
நந்தீஸ்வரர் கண்ணி ...	0	12
ஷெ. வைத்திய [illegible] ஒன்பது [illegible] ...	2	8
அகஸ்தியர் இரண வைத்தியம் 134 முறைகள் ...	0	12
அகஸ்தியர் [illegible] 1500 உரை [illegible] 200 ...	1	4

குமாரவேள் புத்தகசாலை,

இராயப்பேட்டை, சென்னை.

Registered No. M. 1500. "NAVASAKTI

ஒரே கடவுள் ஒரே சமயம்

மக்கள் அனைவருக்கும் சகோதரர்

சமரச சன்மார்க்க போதம்

திருவாளர் - திரு. வி. கலியாணசுந்தரனார் இயற்றியது.

உலகம் விரும்பும் சமத்துவம், சுதந்திரம், சகோதரத்துவம் என்னும் மூன்றையும் இந்நூல் அறிவுறுத்துகிறது.

மக்கள் வளர்ச்சிக்குத் தடைகளாயுள்ள மூட வழக்க ஒழுக்கங்களை ஒழிப்பதற்குரிய சீர்திருத்த முறைகளை இந்நூல் நன்கு விளக்கியிருக்கிறது.

ஒரே கடவுள் ஒரே சமயம் என்னும் உண்மையை இந்நூலிற் காணலாம்.

இயற்கை தட்பங்கள் இந்நூற்கண் இனிது ஓதப்பட்டிருக்கின்றன.

இந்நூல் ஒவ்வொருவரிடத்திலும் இருத்தல் அவசியம்.

விலை அணா 8.

சாதன சதுட்டயம்

முத்தியாக்கத்திற்குரிய அருமையான போதனைகள்

[illegible] ஸ்ரீமான் [illegible] மூர்த்தி [illegible] ஸ்ரீமான் லெட்பீடர் அவர்களும் டாக்டர் அன்னிபெஸண்ட் அம்மையாரும் [illegible] "சாதன சதுட்டயம்" [illegible] வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன.

இந்நூல் [illegible]

[illegible] பக்கம் 520 ; 29 அத்தியாயங் [illegible] விலை ரூபா 3

திவ்ய ஞான தீபம்

இது பாழ்வெளி - விசாரமுறை - [illegible] - புனர் ஜன்மவியல் - [illegible] மரணத்திற்குப்பின் - மார்க்கம் - தியானம் - ஞானசாதனை - [illegible] முத்தர்கள் - குருநாதரைக் காணும் வழி - [illegible] - ஞானபூமிகள் - [illegible] எழுதப்பட்ட நூல். 380 பக்கங்கள் கொண்டது. [illegible] விலை ரூபா 3.

முருகவேள் புத்தகசாலை,
12, கணபதி முதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை.

Edited & Published by T. V. Kalyanasundaram; Printed by T. V. Velayuthan at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah, Madras.